பக்கங்கள்: 19

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஆவணி 26 ஞாயிற்றுக்கிழமை 11.09.2022 கதிர் 308

**இது ரகசியம் அல்ல!**

பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிரான கையெழுத்துச் சேகரிக்கும் ஊர்திப் போராட்டத்தை வியூகம் வகுத்துதான் ஒழுங்கு பண்ணினர் போலும் ஏற்பாட்டாளர்கள்.

இலங்கையின் வடக்கு முனையையும் ☞2

# சர்வதேசத்துக்கு வழங்கிய வாக்குறுதியை மீறாதீர்கள்!

## பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படும் வரை போராட்டம் தொடரும் என்று அரசுக்குச் சுமந்திரன் எம்.பி. எச்சரிக்கை



பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவோம் என்று சர்வதேச சமூகத்துக்கு வழங்கிய வாக்குறுதியை மீறி இலங்கை அரசு செயற்படுகின்றது. அந்த வாக்குறுதியை மீற வேண்டாம் என்று அரசிடம் கேட்டுக்கொள்கின்றோம். பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படும் வரைக்கும் அதற்கு எதிரான எமது போராட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்படும்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். ☞18

## ராஜபக்ஷ கும்பலுக்கு எதிரான விசாரணைக்கு என்ன நடந்தது?

### அரசிடம் சஜித் கேள்விக்கணை



கடந்த மே 9ஆம் திகதி அரசவன்முறையை முன்னெடுத்த ராஜபக்சக்கள் மற்றும் அந்தக் கும்பல்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன? விசாரணைகளுக்கு என்ன நடந்தது?

- இவ்வாறு அரசிடம் கேள்வி எழுப்பினார் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.

மாறாக தமித ☞18

## ஈஸ்டர் தாக்குதல் நாட்டின் உளவுத்துறையினரின் கைவரிசையா என கேள்வி எழுப்புகிறார் ஹக்கீம்



(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம்,செப்.10

ஈஸ்டர் தாக்குதல் மூலம் இஸ்லாமிய தீவிரவாதம் நாட்டுக்குள் ஊடுருவி விட்டதான மாயயயைக் காட்டுவதற்காக கூலிக்கு அமர்த்தப்பட்ட படையினரை இந்த நாட்டின் உளவுத்துறையே பயன்படுத்தியதா என்கிற பாரிய சந்தேகம் தற்போது எழுந்துள்ளதாக ☞18

## தமிழ் அரசியல் கைதிகளைச் சந்திக்க ஒன்றாக மகஸின் சிறைக்கு உறவுகள் பஸ்ஸில் பயணம்



(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம்,செப்.10

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் அமர்வு நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ள நிலையில் நீண்டகாலமாக சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்ற தமிழ் அரசியல் கைதிகளை சந்திப்பதற்காக அரசியல் கைதிகளின் உறவுகள் யாழ்ப்பாணத்தில் ☞18

## திருத்தங்கள் வேண்டாம் முழுமையாக நீக்குங்கள்!



சித்தார்த்தன் வலியுறுத்து

(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம்,செப்.10

பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் திருத்தங்கள் செய்வதை ஏற்றுக் கொள்ள முடியாது. ☞18

## சர்வதேச நீதிப் பொறிமுறை நிலைப்பாட்டில் உறுதி அதில் குழப்பமிலை என்கின்றார் ரெலோ சுரேந்திரன்

### ஜெனிவாவிலிருந்து அவர் தெரிவிப்பு



தமிழ் மக்கள் மீது இழைக்கப் பட்ட யுத்தக் குற்றங்கள், மனித உரிமை மீறல் மற்றும் அட்டூழிய குற்றங்களுக்கான நீதியைக் கோரி இலங்கையை சர்வதேச நீதிமன்றத்தின் முன் பாரப் படுத்துமாறு மனித உரிமைகள் பேரவையின் பிரதான அங்கத்துவ நாடுகளுக்கும் மனித உரிமை உயர் ஸ்தானிகருக்கும் ஐ.நா. ☞2

## போராட்டக்களச் செயற்பாட்டாளர் லஹிரு வீரசேகரவுக்குப் பிணை!



மாற்றத்துக்கான இளைஞர் அமைப்பின் ஏற்பாட்டாளர் லஹிரு வீரசேகர இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான இரு சரீரப் பிணைகளில் விடுவிக்கப்பட்டுள்ளார். ☞2

## பெயரளவுப் பதவிகளால் ‘மொட்டு’க் கட்சி ஏமாற்றம்

இராஜாங்க அமைச்சர்களுக்குரிய பல்வேறு வரப்பிரசாதங்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நிறுத்தப்பட்டுள்ளமை ஸ்ரீலங்கா ☞18

## கோணேஸ்வரத்தைக் காக்க நல்லூரில் இன்று ஒன்றுகூடல்

திருக்கோணேஸ்வரத்தை ஆக்கிரமிப்பதற்கு எதிராக சைவசமய அமைப்புக்கள் ஒன்று கூடி தமது கருத்துக்களை வெளிப்படுத்தும் விசேட ☞2

## நாமல், ஜீவன், அதாவுல்லா உட்பட 12 பேருக்கு அமைச்சுப் பதவிகள்?



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அமைச்சரவையில் புதிதாக 12 அமைச்சர்களை நியமிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அவர்களில் 10 பேர் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிலிருந்தும், எஞ்சிய இருவர் வேறு கட்சிகளிலிருந்தும் நியமிக்கப்படவுள்ளனர் என்று கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

நாமல் ராஜபக்ஷ, ரோஹித அபேகுணவர்தன, சி.பி.ரத்நாயக்க, பவித்ரா வன்னியாராச்சி, ஜனக பண்டார தென்னக்கோன், ☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெற்கு முனையையும் இணைப்பது என்றால் பருத்தித்துறைதான் உச்சப் புள்ளி. ஆனால் அதை விடுத்து காங்கேசனில் இருந்து இதை ஆரம்பிக்கத் தேர்வு செய்தமைக்கு ஒரு காரணம் உண்டு.

நிகழ்ச்சி நடந்த மாவிட்டபுரம் தமிழரசுத் தலைவர் மாவை சேனாதிராசாவின் பூர்வீகத் தாயகம். இந்தப் போராட்டத்தில் இருந்து மாவை நழுவி விடாமல் அமுக்கிக் கொள்வதை உறுதிப்படுத்துவதற்கான ஏற்பாடுதான் இந்த இடத் தேர்வு.

நேற்றைய இந்த நிகழ்ச்சிக்கு அனைத்து தரப்புகளில் இருந்தும் ஒத்துழைப்புக் கிடைத்த திருப்தியில் இருக்கின்றார் ஏற்பாட்டாளர்களில் முக்கியமானவரான சுமந்திரன் என அறிய முடிந்தது.

மாவை, சி.வீ.கே.சிவஞானம், சரவணபவன் என்று தங்கள் கட்சியின் முக்கியஸ்தர்கள் எல்லோரும் வந்து முன்னுக்கு நின்று விடயத்தை ஆரம்பித்து வைத்தமை சுமந்திரன் அணிக்கு முழுத் திருப்தி.

விசேடமாக ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன், புளொட் தலைவர் சித்தார்த்தன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் போன்றோர் நேரடியாக வந்து கலந்து கொண்டமை ஏற்பாட்டாளர்களை மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தியுள்ளது.

நீதியரசர் விக்னேஸ்வரன் இரண்டு, மூன்று தடவைகள் தொலைபேசி எடுத்து சுமந்திரனுடன் இந்நிகழ்வு பற்றிப் பேசி ஊக்கம் தந்திருக்கின்றார். தவிர்க்க முடியாத காரணங்களினால் பங்குபற்ற இயலவில்லை என்று மின்னஞ்சல் செய்தியும் அனுப்பினார் என ஒரு தகவல் உண்டு.

ரெலோ வரவில்லை. ஆனால் கொழும்பிலிருந்து இதற்காக விசேடமாக வர முயன்றார் செல்வம். நிகழ்ச்சி காலையில் நேரத்துடன் என்பதால் வந்து சேர முடியவில்லை எனக் குறிப்பிட்டுள்ளார். இரண்டு, மூன்று தடவைகள் இது குறித்து சுமந்திரனுடன் அவர் பேசி உள்ளார். அவரின் வலது கை சுரேந்திரன் ஜெனிவாவில். அதனால் அவரையும் அனுப்ப முடியவில்லை. ஆனால் இந்தக் கையெழுத்து ஊர்தி வவுனியா, மன்னார் வரும் போது அதன் பொறுப்பை செல்வம் எம்.பியே முன்னெடுத்து வழிநடத்துவார் என்று உறுதி கூறியிருக்கின்றாராம்.

அதேபோல நேற்றைய நிகழ்ச்சியில் தமிழ் முற்போக்கு முன்னணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பியும் கலந்து கொள்வார் என ஏற்பாடாகி இருந்தது. எனினும் கொழும்பில் ஏற்கனவே ஒப்புக் கொண்ட ஒரு நிகழ்ச்சியில் பங்குபற்ற வேண்டிய கட்டாயம் இருந்தமையால் அவராலும் நேற்றுக் கலந்து கொள்ள முடியவில்லை. ஆயினும் தெற்குக்கு இந்த ஊர்தி வரும்போது சில பிரதேசங்களில் அந்த நிகழ்ச்சிப் பொறுப்பை மனோ அணியினர் ஏற்பர் எனத் தெரிகின்றது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைக்கறுப்பையும் காணவில்லை. அழைப்பு விடுத்தார்களா, அல்லது விடுத்தும் வரவில்லையா தெரியவில்லை. தாங்கள் மட்டுமே 24 கரட் சொக்கத் தங்கம் என்று கருதும் அவர்கள், இந்த 'பித்தளை' அரசியல்வாதிகளின் ஆரவார நிகழ்ச்சிக்கு வராமல் விட்டமையில் புதுமை இல்லை.

முக்கியமான இன்னொருத்தர்தான் வரவில்லை. அவர் - சிற்றரசர், சின்ன ஜமீன், நாட்டாண்மை ஸ்ரீதரன் எம்.பி., அவர் மட்டுமல்லர், அவரின் ஜமீனின் பிரதிநிதிகள் எவருமே தலைகாட்டவேயில்லை. அந்த ஊர்தி இனி, கிளிநொச்சி ஜமீன் பக்கம் போகும்போதும், ஜமீன் ஆதரவாளர்கள் எல்லோரும் கதவைப் பூட்டிக்கொண்டு வீடுகளுக்குள் முடங்கி விடுவரோ தெரியவில்லை. அப்போது சந்திரகுமார் அணிதான் ஊர்தியை வரவேற்கும் என்னவோ...?

தனக்கு அழைப்பு இல்லை, அதனால் வரவில்லை என்கிறார் சின்ன ஜமீன். அவருக்கு அழைப்பு இல்லாதமையால் தான் ஜமீன்தாரின் மற்றப் பிரதிநிதிகளும் தலை காட்டவில்லைப் போலும். ஆனால் "அவருக்குத்தான் முதலில் சொன்னோம். 'என்னால் வர முடியாது, நீங்களே நின்று நடத்துங்கள்!' என்று ஸ்ரீதரன் எம்.பியிடம் நானே முதலில் நேரடியாகக் கேட்டேன்" - என்கிறார் சுமந்திரன்.

எது உண்மை, எது பொய், எது எப்படியோ, சுமந்திரன் - ஸ்ரீதரன் உறவின் நிலை பற்றிய கணிப்பீட்டுக்கு நேற்றைய நிகழ்ச்சி தளமாகிவிட்டது என்பது மட்டும் உண்மை.

- மின்னல் -

## போராட்டக்களச் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கான உத்தரவை மாளிகாகந்த மேலதிக நீதிவான் நேற்றுப் பிற்பகல் பிறப்பித்தார்.

காலிமுகத்திடல் போராட்டக்களச் செயற்பாட்டாளரான லஹிரு வீரசேகர, கொழும்பு - டுப்ளிகேன் வீதியில் வைத்து நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

மருதானையில் அண்மையில் நடைபெற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின்போது, பொலிஸ் அதிகாரிகளின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்தமை, முறையற்ற வகையில் ஒன்றுகூடிய அமைப்பின் உறுப்பினராகச் செயற்பட்டமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் கீழ் லஹிரு வீரசேகர கைது செய்யப்பட்டார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

மருதானை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த லஹிரு வீரசேகர, திடீர் சுகயீனம் காரணமாக நேற்றுக் காலை சட்ட வைத்தியரிடம் முன்னிலைப் படுத்தப்பட்ட பின்னர், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

## சர்வதேச நீதிப் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்புச் சபையைத் தூண்டுமாறு கையெழுத்திட்ட கோரிக்கையை அனுப்பி வைத்துள்ளோம். இது இன்று நேற்றல்ல, எமது தொடர்ச்சியான நிலைப்பாடு.

சர்வதேச நீதிப் பொறிமுறை, சர்வதேச விசாரணை என்பவற்றிற்கு குறைவான எந்த விடயங்களும் தமிழ் மக்களுக்கு தீர்வைத் தரா என்பதில் நாம் தொடர்ந்தும் உறுதியாக இருக்கின்றோம். மாத்திரமல்ல அதற்காக அர்ப்பணிப்போடு உழைத்து வருகிறோம் என்பதை அனைத்து தமிழ் மக்களும் நன்கு அறிவர்.

- இவ்வாறு ரெலோ பேச்சாளர் சுரேந்திரன் நேற்று ஜெனிவாவிலிருந்து தெரிவித்தார்.

நாளை ஆரம்பமாகும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது அமர்வின் போது இலங்கை விடயங்களை ஒட்டி தமிழர் தரப்புகளுக்காகப் பிரச்சாரம் மற்றும் பரிந்துரை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோக்கில் அவர் ஜெனிவா சென்றுள்ளார்.

ஆறு தமிழ் கட்சிகளின் சார்பில் பேரவைக்கு அனுப்பப்பட்ட கோரிக்கைக் கடிதத்தை ஆறு கட்சிகளையும் ஒன்றிணைத்து தயாரிப்பதில் முன் நின்றவர் சுரேந்திரன். அந்த வகையில் ஆறு கட்சிகளின் சார்பிலும் அவர் இலங்கை விடயங்களைக் கையாளும் இணைத் தலைமை நாடுகளின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடுவார் எனத் தெரிவிக்கப் பட்டது.

அவர் நேற்று மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஐ.நா. விடயங்களில் மாத்திரமல்லாமல் அன்றாட விடயங்களிலும் தமிழ் மக்கள் எதிர்கொண்டிருக்கும் அவசர, அவசியமான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் நாங்கள் அக்கறையோடும் செயலாற்றுவோம்.

பத்திரிக்கை அறிக்கைகளைத் தாண்டி, மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற செயல் வடிவம் கொடுப்பதே அர்த்தமுள்ளதாக அமையும் என்பதில் நாங்கள் நம்பிக்கை கொண்டவர்கள்.

தமிழ் மக்களின் அரசியல் விடுதலைக்காக பல வழிகளிலும் போராடி வரும் வரலாற்றைக் கொண்ட எமது கட்சி தொடர்ந்தும் உறுதியுடன் பயணிக்கும் என்பதை மீண்டும் வலியுறுத்த விரும்புகிறோம். - என்றார்.

## கோணேஸ்வரத்தைக் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டம் ஒன்று இன்று காலை 10 மணிக்கு நல்லூர் கோவில் வீதியில் உள்ள அகில இலங்கை இந்து மாமன்றத்தின் பிராந்திய அலுவலக மண்டபத்தில் நடைபெறுகின்றது.

தமிழர்களின் பூர்வீகச் சொத்தாக விளங்கும் திருக்கோணமலை திருக்கோணேஸ்வர ஆலயம் அமைந்துள்ள பகுதியில் திட்டமிட்டு சிங்கள வாணிபநிலையங்களை நிரந்தரமாக அமைப்பதற்கு அவசர ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. இது குறித்து பலரும் அரசாங்கத்திடம் தமது எதிர்ப்பைத் தெரிவித்த போதிலும், திட்டமிட்டு அரசின் ஆதரவோடு திருக் கோணேஸ்வரச் சூழல் பறிக்கப்பட்டு வருகிறது. ஆலயத்துக்கு உரித்தான 18 ஏக்கர் நிலப்பரப்புக்காணிக்குள் தொல்லியல் திணைக்களமும், கிழக்கு மாகாண ஆளுநரும் கோவில் நிலத்தை அபகரிக்கும் செயற்பாட்டில் இறங்கியிருப்பதைத் தடுக்க அனைவரும் ஒன்றுபட்டு எதிர்பினைத் தெரிவிப்பதற்காக இக்கண்டனக் கூட்டம் கூட்டப்படுகிறது.

சைவசமய அமைப்புக்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அகில இலங்கை இந்து மாமன்றம் வேண்டுதல் விடுத்துள்ளது.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் அவர்களின் தலைமையில் திருக்கோணமலை கோணேஸ்வர ஆலய நிர்வாக சபையினர் உட்பட பலர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டு அங்குள்ள இன்றைய சூழலை தெரியப்படுத்தவுள்ளார்கள் கலாநிதி ஆறு. திருமுருகன் கூறினார்.

## நாமல், ஜீவன், ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எஸ்.பி.திஸாநாயக்க, விமலவீர திஸாநாயக்க, சரத் வீரசேகர, எஸ்.எம்.சந்திரசேன ஆகியோரை அமைச்சர்களாக நியமிக்குமாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன முன்மொழிந்துள்ளது.

ஏனைய கட்சிகளில் இருந்து ஜீவன் தொண்டமான் (இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்) மற்றும் ஏ.எல்.எம்.அதாவுல்லா (தேசிய காங்கிரஸ்) ஆகியோர் முன்மொழியப்பட்டுள்ளனர்.

# சிவபாலனின் நினைவு தினம் இன்று அனுஷ்டிப்பு



யாழ். மாநகர முன்னாள் முதல்வர் பொன். சிவபாலனின் 24ஆவது நினைவு இன்று அனுஷ்டிக்கப்படுகின்றது.

1998 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11 ஆம் திகதி யாழ். மாநகரசபையில் மாநகர போக்குவரத்து சம்பந்தமான உயர் அதிகாரிகளுடனான கலந்துரையாடலின் போது கூரைமேல் வைக்கப்பட்ட கிளைமோரின் தாக்குதலில் பொன். சிவபாலன் கொல்லப்பட்டார்.

அவருடன் யாழ். நகர இராணுவத் தளபதி பிரிகேடியர் சுசந்த மெண்டிஸ், சிரேஷ் பொலிஸ் அத்தியடசகர் சந்திரா பெர்னாண்டோ, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சந்திரமோகன், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சரத் பெர்னாண்டோ, யாழ். தலைமையக பொலிஸ் அதிகாரி மோகனதாஸ், யாழ். நகர பிரிகேட் மேஜர் கப்டன் ராமநாயக்க, பொலிஸ் கான்ஸ்டபிள் ஜெராட், யாழ் மாநகர சபை உதவி ஆணையாளர் பத்மநாதன், வேலைப் பகுதிப் பொறியியலாளர் ஈஸ்வரன், கட்டட வரைபடக் கலைஞர் திருமதி மல்லிகா இராஜரட்ணம், தட்டெழுத்தாளர் பத்மராஜா ஆகியோர் அடங்கிய பன்னிரண்டுபேர் தாக்குதலில் கொல்லப்பட்டனர்.

அஞ்சலி நிகழ்வு அன்னாரது சித் தங்கேணி இல்லத்தில் காலை 8.00 மணிக்கு நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.







# ஏனைய அமைச்சர்களுக்காகவே நான் மாத சம்பளம் பெறுவேன்!

## இராஜாங்க அமைச்சர் சனத் இப்படி விளக்கம்



மே மாதம் 09 ஆம் திகதி அமைச்சு பதவிகளை துறந்தோம். செப்ரெம்பர் மாதம் இராஜாங்க அமைச்சுக்களைப் பொறுப்பேற்றுள்ளோம். பெரும்பாலான இராஜாங்க அமைச்சர்கள் குறைந்த வருமானம் பெறும் நிலையில் நெருக்கடிக்குள்ளாகியுள்ளார்கள். ஆகவே அவர்களுக்காக நானும் மாத சம்பளம் பெறுவேன் என நீர்பாசனத்துறை இராஜாங்க அமைச்சர் சனத் நிாந்த தெரிவித்தார்.

நீர்பாசனத்துறை இராஜாங்க அமைச்சுக்கான கடமைகளை பொறுப்பேற்றதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

மே மாததம் 09 ஆம் திகதி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அமைச்சரவை முழுமையாக விலகியது. அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு காண வேண்டும் என்பதற்காக இராஜாங்க அமைச்சுப் பதவிகளைத் துறந்தோம். சர்வக்கட்சி அரசாங்கத்தை ஸ்தாபிப்பதற்கு பிரதான எதிர்க்கட்சிகள் முழுமையான ஒத்துழைப்பை வழங்கவில்லை.

பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்துள்ள பின்னணியில் நாட்டுக்கு சுமையாக இராஜாங்க அமைச்சுக்களை பொறுப்பேற்கவில்லை.அரச நிர்வாக கட்டமைப்பை சிறந்த முறையில் கொண்டு செல்வதற்காகவே இராஜாங்க அமைச்சு பதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இராஜாங்க அமைச்சர்களுக்கு விசேட வரபிரசாதங்கள் ஏதும் வழங்கப்படுவதில்லை.வர்த்தகர் என்ற ரீதியில் மாத சம்பளத்தை கூட என்னால் பெறாமல் இருக்க முடியும், பெரும்பாலான இராஜாங்க அமைச்சர்கள் குறைந்த வருமானம் பெறும் நிலையில் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

நான் மாத சம்பளத்தை பெறாவிடின் அது அவர்களுக்கு ஏதாவதொரு வழியில் பாதிப்பை ஏற்படுத்தும்,சனத் நிாந்த மாத சம்பளம் பெறவில்லை ஏன் நீங்கள் பெறுகின்றீர்கள் என ஒரு தரப்பினர் கேள்வி எழுப்புவார்கள். நான் மாத சம்பளம் பெறுவேன்.

இராஜாங்க அமைச்சு ஊடாக பெறும் வரபிரசாதங்களை பெற்று அதனை நாட்டு நாட்டு மக்களுக்கான சேவைக்கு பயன்படுத்துவேன். குறுகிய அரசியல் எதிர்தரப்பினர் முன்வைக்கும் குற்றச்சாட்டு அடிப்படையற்றவை. சவால்களை பொறுப்பேற்க அவர்களுக்குத் தைரியமில்லை. மாறாக விமர்சனங்களை மாத்திரம் முன்வைக்கிறார்கள். – என்றார்.

## பிரபல ஓவியர் தவம் மறைவு!



பிரபல ஓவியரும் அச்சுத்துறை நிபுணருமான தவம் (வீ.சுப்பிரமணியம்) சிறிது கால சுகவீனத்துக்கு பிறகு கடந்த புதன்கிழமை யாழ்ப்பாணத்தில் தனது 74 ஆவது வயதில் காலமானார்.

வடமராட்சி கரவெட்டியை சேர்ந்த தவம் 1960 களில் தொடங்கி பத்திரிகைத்துறை ஓவியராக பணியாற்றத்தொடங்கிய தமிழ் ஓவியர்கள் வரிசையில் முக்கியமான ஒருவர். கொழும்பில் கே.ஜி. இண்டஸ்ட்ரீஸ், சினிமாஸ் தியேட்டர்ஸ் நிறுவனங்களில் பணியாற்றுவதற்கு முன்னர் வீரகேசரி ஆசிரியபீட ஓவியர்களில் ஒருவராக இருந்தவர். இளவயதில் இந்தியா சென்று ஓவியக்கலையின் நுட்பங்களைப் பயின்றவர்.

நவீன அச்சுத்துறையில் ஆர்வம்கொண்ட அவர் கொழும்பில் லக்சு கிரபிக்ஸ் என்ற அச்சு நிறுவனத்தையும் நிறுவியவர்.

கரவெட்டியில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற தவத்தின் இறுதிக் கிரியைகளில் சமுதாயத்தின் பல்வேறு பிரிவுகளையும் சேர்ந்த மக்கள் பெருமளவில் கலந்துகொண்டு அவருக்கு அஞ்சலி செலுத்தினர். அவரின் மறைவு தமிழ்ச்சமூகத்தின் மத்தியில் ஓவியத்துறைக்கு பெரும் இழப்பு என்று இறுதி நிகழ்வில் அஞ்சலி உரைநிகழ்த்திய பலரும் தெரிவித்தனர். சுகவீனமுற்றிருந்த நிலையிலும் இறுதி நாள்களிலும் அவர் ஓவியங்களை வரைவதைக் கைவிடவில்லை.

## இலங்கை மாணவர்களுக்கு சீன அரசு 5 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி உதவி



இலங்கை மாணவர்களுக்கு அரிசி வழங்கும் வேலைத்திட்டத்தின் ஒரு கட்டமாக, 5 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி சீனாவால் அரசாங்கத்திடம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டது.

கல்வி அமைச்சில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மற்றும் சீன தூதுவர் ஏஷ்குய் ஜென்ஹொங் ஆகியோர் கலந்துகொண்டனர்.

சீன மக்களின் நட்புறவின் மற்றுமொரு அடையாளமாக, இலங்கை மக்களுக்கு பிரதானமாக அரிசி வழங்கும் வேலைத்திட்டத்தின் கீழ் கிட்டத்தட்ட பத்து லட்சம் மாணவர்களுக்கு சீன அரசு அரிசி உதவி வழங்கவுள்ளது.

இந்த வேலைத்திட்டம் தெரிவு செய்யப்பட்ட 7 ஆயிரத்து 925 பாடசாலைகளில் அமுல்படுத்தப்படவுள்ளதுடன், இலங்கையிலுள்ள மொத்த பாடசாலைகளில் 78 வீதப் பாடசாலைகளை இது உள்ளடக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.







விளம்பரத் தொடர்புகளுக்கு -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் - 076 443 8622






காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## ரணில் வகுக்கும் வியூகம்

**'வாராது வந்த மாமணி' போல தமது கைக்கு அதிர்ஷ்டமாக வந்து கிட்டிய ஜனாதிபதிப் பதவியை மேலும் ஓர் ஐந்து ஆண்டுகளுக்குத் தக்க வைப்பதற்கு கனகச்சிதமாக வியூகம் வகுக்கின்றார் ரணில் விக்கிரமசிங்க – அரசியலில் தமது நரி தந்திரங்களைப் பயன்படுத்தி.**

**ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முயன்று தோற்றுப் போன தந்திரம்தான். ஆனால் ரணில் தந்திரோபாயமாகக் காய் நகர்த்துகிறார்.**

**ஜனாதிபதியாகத் தாம் இருந்து கொண்டு, மஹிந்தவைப் பிரதமராக்கித் தனது வலது கையாக மாற்றினால், அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தன்னையே வேட்பாளராக்கி வெல்லுவதற்கு மஹிந்த உதவுவார் என மைத்திரி அப்போது எதிர்பார்த்தார். அதனால்தான் எதிரித் தரப்பாக இருந்த மஹிந்தரை அரவணைத்து, 2018 இல் அவரைப் பின் கதவால் பிரதமராக்கினார் மைத்திரியார். ஆனால், ரணில் – சுமந்திரன் கூட்டுச் செயற்பாடு 52 நாள்களில் அந்த முயற்சிக்கு ஆப்பு வைக்க, மீண்டும் ஜனாதிபதியாகும் மைத்திரியின் கனவு கலைந்து, சிதைந்து போனது.**

**இப்போது அதே உத்தியை ரணில் கையில் எடுத்திருக்கின்றார். முற்கூட்டியே 2024 முற்பகுதியில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தி, அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு ஜனாதிபதியாகத் தொடர அவர் எண்ணுகிறார்.**

**மஹிந்தவைப் பிரதமராக வைத்துக் கொண்டு, அவரின் ஆதரவு, ஆசீர்வாதத்தோடு அந்தத் தேர்தலை எதிர்கொண்டால் வெற்றி நிச்சயம் என்பது ரணிலின் கணிப்பு.**

**மகன் நாமல் ராஜபக்ஷ இளைஞர், அவர் 2029 அல்லது 2030 இல் ஜனாதிபதி பதவிக்கு வந்தால் போதும் என்று கணக்கிடும் மஹிந்தர், அதற்கிடையில் ஒரு தடவை மட்டும் ஜனாதிபதியாக இருக்கக்கூடிய ஒருவருக்கு இடமளிப்பது பொருத்தமானது எனக் கருதுகிறார். நாமலை அரவணைத்து, முன்னுரிமை கொடுக்கும் ரணில், அதற்குப் பொருத்தமானவர் என்ற கருத்து மஹிந்தருக்கு உண்டு. இப்போதே 74 வயதில் இருக்கும் ரணில் 2029 இல் மீண்டும் ஜனாதிபதி பதவிக்கு முயற்சிக்க மாட்டார் என்பது உறுதி.**

**இத்தகைய திட்டம் ஒன்றின் முதல் நடவடிக்கைதான் ஷசீந்திர ராஜபக்ஷவுக்கு இராஜாங்க அமைச்சர் பதவி.**

**ராஜபக்ஷக்களை மீண்டும் பதவிக்குக் கொண்டு வருவதில் உள்ள சிக்கல்களை அமிலப் பரிசோதனை செய்து பார்க்கிறார் ரணில்.**

**அடுத்து நாமலுக்கு முழு அமைக்க பதவி வழங்குவார். அதற்கும் பெருத்த எதிர்ப்புக் கிளம்பாமல் விட்டால் அடுத்த வருட முற்பகுதியில் பிரதமர் பதவி மீண்டும் மஹிந்தர் கைக்கு வரும்.**

**இப்போது திரை மறைவில் ஆட்சியை கொண்டு நடத்தும் ரணில் – மஹிந்தர் கூட்டு, அதன் பின்னர் பகிரங்கமாக அந்தப் பாதையில் பயணிக்கும்.**

**அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ரணிலையே தங்கள் மொட்டுக் கட்சியின் ஆதரவு வேட்பாளராகவும் மஹிந்தர் அறிவிப்பார். பிரதி உபகாரமாக தமது அந்தப் பதவிக் காலம் முடிவடைவதற்கு இடையில் நாமலை அடுத்த ஜனாதிபதி நிலைமைக்கு நெட்டி தள்ளிக் கொண்டு வந்து நிறுத்துவார் ரணில்.**

**ரணில் – மஹிந்த இடையே இப்போது வேலை செய்யும் 'கெமிஸ்ட்ரி' இந்தத் திட்டத்திற்கு இலாவகமாகத்தான் இருக்கின்றது என்பது மறுக்க முடியாத உண்மை.**

## மக்களின் வாழ்க்கைதரத்தை உயர்த்துவதே காலத்தின் இன்றைய அவசரத் தேவையாகும்

### காதர் மஸ்தான் சுட்டிக்காட்டு



நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதார நிலைமை சீராகி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்குக் காத்திரமான நடவடிக்கையை மேற்கொள்வதே காலத்தின் தேவையாகும்.

அமைச்சு பொறுப்புக்களுக்கு அப்பால் நாம் கடின உழைப்பின் பக்கம் செல்ல வேண்டிய தருணம் எம் அனைவர் மீதும் உணரப்பட்டுள்ளது என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சருமான காதர் மஸ்தான் தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள வர்த்தக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சில் தனது இராஜாங்க அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்றுக்கொண்ட பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

தற்போது நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதார நிலைமை சீராகி மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதற்கு காத்திரமான நடவடிக்கையை மேற்கொள்வதே காலத்தின் தேவையாகும்.

அமைச்சுப் பொறுப்புக்களுக்கு அப்பால் நாம் கடின உழைப்பின் பக்கம் செல்ல வேண்டிய தருணம் எம் அனைவர் மீதும் உணரப்பட்டுள்ளது.

பொறுப்புக்கள் என்பது அதிகாரங்களுடனான சுகபோகங்களை அனுபவிப்பதற்கு அல்ல. மக்கள் பிரதிநிதி என்ற வகையில் எம் மீது சுமத்தப்பட்டுள்ள மக்களின் பிரச்சினைகளுக்கு இதயசுத்தியுடன் உழைக்கும் உன்னத பொறுப்பாகும். இதனை நாம் கடமை உணர்வுடன் செய்ய வேண்டிய தேவை இருக்கின்றது.

அமைச்சு பொறுப்புக்களையும் அதிகார சுகபோகங்களையும் விட்டுவிட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு அனைவரும் இதயசுத்தியுடன் செயற்பட வேண்டுமென இந்த இடத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகின்றேன். – என்றார்.

## பெரமுனவின் சிறைக் கைதியாகியுள்ளார் நாட்டின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க!

### குமார வெல்கம சாடல்

பொதுஜன பெரமுனவின் சிறைக்கைதியாகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செயற்படுகின்றார்.

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண ராஜபக்ஷர்கள் ஒருபோதும் இடமளிக்கப் போபவர்களல்லர். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது பதவிக் காலத்தை சிறந்த முறையில் முழுமைப்படுத்த வேண்டுமாயின் ராஜபக்ஷர்களும், பொதுஜன பெரமுனவும் அரசியலில் இருந்து முழுமையாகப் புறக்கணிக்கப்பட வேண்டும்.

நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரத்தை ஜனாதிபதி முறையாகப் பயன்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை அவரிடம் முன்வைக்கிறோம் என புதிய லங்கா சுதந்திர கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான குமார வெல்கம தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள புதிய லங்கா சுதந்திர கட்சியின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 37 இராஜாங்க அமைச்சுக்கான நியமனங்களை வழங்கியுள்ளார். எதிர்வரும் ஓரிரு நாள்களில் இந்த எண்ணி;க்கைக்கமைய அமைச்சரவை அமைச்சுக்கான நியமனமும் இடம்பெறும்.

இராஜாங்க அமைச்சுக்கான வரப்பிரசாதங்களைப் பெற்றுக்கொள்ளப் போவதில்லை என இராஜாங்க அமைச்சர்கள் குறிப்பிட்டுள்ளார்கள், ஆனால், நாடாளுமன்றஉறுப்பினர்பதவிக்கானசம்பளத்தைப் பெறுவார்கள்.

உறுப்பினர் பதவிக்கான சம்பளத்துக்கும், இராஜங்க அமைச்சுக்கான சம்பளத்துக்கும் இடையில் 15 ஆயிரம் ரூபா மாத்திரமே வேறுபாடு.

37 இராஜாங்க அமைச்சர்களுக்கான வாகனம் மற்றும் அவர்களுக்கான சேவையாளர்கள், சேவையாளர்களுக்கும் வசதிகள் என வசதிகள் விரிவடைந்து செல்லும். நாடு மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள பின்னணியில் 37 இராஜாங்க அமைச்சுக்கள் அவசியம் தானா? இவர்களுக்கு நிதி ஒதுக்கவே அரச வருமானத்தில் பெருமளவிலான பகுதியை ஒதுக்க நேரிடும்.




அமைச்சரவை அமைச்சுகளுக்காக பிரதி அமைச்சு நியமனங்களும் இடம்பெறாம். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு செயற்படுவார் என எதிர்பார்க்கவில்லை. சர்வகட்சி அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக குறிப்பிட்டோம், இருப்பினும் தற்போது பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களையும், சுதந்திர கட்சியின் ஒருசில உறுப்பினர்களையும் உள்ளடக்கிய வகையில் அரசாங்கம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது விருப்பத்தின் பிரகாரம் செயற்பட முடியாத சிறைக் கைதியைப் போல் உள்ளார். இடைக்கால வரவு – செலவுத் திட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக வாக்களித்தேன். பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண ராஜபக்ஷர்கள் ஒருபோதும் இடமளிக்கப் போபவர்களல்லர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதத்துக்குப் பின்னர் நாடாளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலை நடத்தினால் ராஜபக்ஷர்களும், பொதுஜன பெரமுனவும் படுதோல்வியடையும்.

நாடாளுமன்றப் பலத்தைக் கைப்பற்றும் அரசியல் தரப்புடன் ஒன்றிணைந்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் சிறந்த முறையில் செயற்பட முடியும். ஆகவே, பொறுமையுடன் இருந்து நாடாளுமன்றத்தைக் கலைப்பதே சிறந்த தீர்வாக அமையும். – என்றார்.



கிளிநொச்சியில்

# ஐஸ்வர்யம் பெருவிருந்து மண்டபம்

# Ishwaryam Banquet Hall



Tel:- 021 228 3701, 071 7354308

Whatsapp:- 071 7736 4308

No.315, Kandy Road, Kilinochchi



- அன்பான வரவேற்பு
- தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
- இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
- இந்தியன் உணவுவகைகள்
- Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.

சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

# ISHWARYAM BANQUET HALL

## BANQUET MEALS HALL





## FULL OPTION

### MAIN DIHES

Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style

### DESSERT

| | |
|---|---|
| ice Cream Cup | - 60/= |
| Fruit Salad | - 60/= |
| I ce Cream & Fruit Salad | - 100/= |
| Cream Caramel | - 120/= |

SPECIAL MENU PACKAGE

### BEVERAGES

| | |
|---|---|
| jUICE 200 ml | - 70/= |
| Milk Drink | - 70/= |
| Cocacola M | - 70/= |
| Pepsi M | - 70/= |
| Swchpees Tin | - 250/= |
| Coca Cola Tin | - 250/= |

# எமது தவறுகளைத் தட்டிக்கேட்கும் உரிமை சாணக்கியன் போன்றவர்களுக்கு கிடையாது!

## சீறுகின்றார் நாமல் ராஜபக்ஷ



எமது தவறுகளைத் தட்டிக்கேட்கும் உரிமை எமக்கு வாக்களித்த மக்களுக்கு மாத்திரம் இருக்கிறதே தவிர, சந்தர்ப்பவாத அரசியல் நடத்தும் சாணக்கியன் போன்றவர்களுக்கு எந்தவோர் அருகதையும் கிடையாது என முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாமல் ராஜபக்ஷ தொடர்பில் சாணக்கியன் நாடாளுமன்றத்தில் தெரிவித்த கருத்துதொடர்பாக கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள அவர் –

2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட பின் நாங்கள் தமிழர் பிரதேசங்களில் அபிவிருத்திகளையும் தமிழ் மக்களின் உடனடித் தேவைகளை நிறைவேற்றும் பணிகளையும் செய்யத் தொடங்கிவிட்டோம். அப்பொழுதெல்லாம் முடங்கிக் கிடந்த சாணக்கியன், இப்போது தன் சுயநல அரசியலுக்காக எம்மை விமர்சிக்கத் தொடங்கியிருக்கிறார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பாடசாலைகள், வைத்தியசாலைகள், வீட்டுத்திட்டங்கள், வேலைவாய்ப்புகள், விளையாட்டுக் கழகங்கள் என பல உதவிகளைச் செய்திருக்கிறோம்.

இவற்றில் பலவற்றை அப்பிரதேச நாடாளுமன்ற உறுப்பினரான சாணக்கியன் நேரில் பார்த்தே இருக்க மாட்டார். அப்படிப்பட்ட சுயநல அரசியல்வாதிக்கு எம்மைப்போன்ற மக்கள் சேவகர்களை விமர்சிக்கும் எந்தவோர் அருகதையும் கிடையவே கிடையாது.

பிள்ளையான் அன்று தொடக்கம் இன்றுவரை தான் கொண்ட கொள்கையில் மாற்றமின்றி, கட்சித் தாவலின்றி எம்மோடு தொடர்ந்து பயணித்து வருகிறார்.

அவரது கட்சி நிகழ்வில் நாம் கலந்துகொள்வது தார்மீகக் கடமையும்கூட. நிலைமை அப்படியிருக்கையில், அலரி மாளிகைக்கு அடிக்கடி வந்து எம்மோடு தேநீர் அருந்துவதும், நிலையான அரசியல் கொள்கையின்றி கட்சிதாவி சுயநலத்துக்காக தமிழ் மக்களைப் பகடைக் காய்களாகப் பயன்படுத்துவதையும் பார்க்கும்போது வேடிக்கையாக இருக்கிறது. – எனத் தெரிவித்துள்ளார்.

## சார்க் நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களை சுதந்திர தினத்துக்கு அழைப்பதற்குத் தீர்மானம்!

இலங்கையின் 75 ஆவது சுதந்திர தின நிகழ்வுக்கு, சார்க் நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களை சிறப்பு விருந்தினர்களாக அழைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

75 ஆவது சுதந்திர தின விழா கொண்டாட்ட ஏற்பாட்டுக் குழுவின் முதலாவது கூட்டம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது. இதன்போதே சர்வதேச ஒத்துழைப்பை மேம்படுத்தும் நோக்கில், சார்க் வெளிவிவகார அமைச்சர்களை அழைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## சுமார் 35 வீதமான உணவகங்கள் ஏற்கனவே நாட்டில் மூடப்பட்டுள்ளன!

கொழும்பு, செப்.11

பேக்கரி உற்பத்திப் பொருள்களின் விலை அதிகரிப்புடன் நுகர்வோர் அந்தப் பொருள்களைக் கொள்வனவு செய்யாத நிலை அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அகில இலங்கை உணவக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்காரணமாக உணவகங்கள் மூடப்படும் அபாயம் உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

வாடகை அடிப்படையில் நடத்தப்படும் சுமார் 35 வீதமான உணவகங்கள் ஏற்கனவே மூடப்பட்டுள்ளன எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.





## குட்டிக் கதை ஒன்று படித்துப் பாருங்கள்




# எதிர்கால வாழ்க்கை



ஒரு நாள் முல்லா தெருவழியாக நடந்து போய்க் கொண்டிருந்தார். ஒரு குடிசை வாசலை அவர் கடந்து சென்ற சமயம் குடிசைக்குள் ஏதோ சத்தம் கேட்கவே உள்ளே சென்றார்.

அந்தக் குடிசையில் ஒரு ஏழை விதவைப் பெண் வசித்து வந்தாள். துணிகளை தைத்துக் கொடுத்து அவள் கஷ்ட ஜீவனம் நடத்திக் கொண்டிருந்தாள். அவளுக்கு பத்து வயதில் ஒரு மகன் இருந்தான்.

அந்தக் குடும்பத்தைப் பற்றி முல்லாவுக்கு நன்றாகத் தெரியும் அவர்கள் மீது அவருக்கு அனுதாபமும் உண்டு.

வீட்டுக்குள் தாயும் மகனும் ஏதோ சச்சரவில் ஈடுபட்டிருந்தனர்.

இங்கே என்ன நடக்கிறது? என்று முல்லா வினவினார்.

முல்லா அவர்களே இவனைப் பாருங்கள் ஒழுங்காக பள்ளிக்கூடம் போகமாட்டேன் என்று அடம்பிடிக்கிறான், அறிவுரை கூறிப் பார்த்தேன் அடித்து மிரட்டிப் பார்த்தேன் ஒன்றுக்கும் மசியமாட்டேன் என்கிறான் என்றாள் தாய் வேதனையோடு.

குழந்தாய் நீ பள்ளிக்கூடம் போக வேண்டியது அவசியமில்லையா? அது உன் எதிர்காலத்துக்கு நல்லதில்லையா? என்று முல்லா சிறுவனுக்கு புத்திமதி கூறினார். பையன் கேட்பதாக இல்லை.

நான் பள்ளிக்கூடம் போகப்போவதே இல்லை என்று அடம்பிடித்தான்.

முல்லா சுற்றும்முற்றும் பார்த்தார் தைப்பதற்காக அந்தப் பையனின் தாய் வைத்திருந்த விலை உயர்ந்த துணி ஒன்று அவர் கண்களில் பட்டது.

அதை எடுத்து முல்லா துண்டு துண்டாகக் கிழித்துப் போட்டு விட்டார். அதைக்கண்டு தாயும் மகனும் அதிர்ச்சியும் திகைப்பும் அடைந்தனர்.

அம்மா முல்லா விலை உயர்ந்த துணியைக் கிழித்துப் பாழாக்கி விட்டரே? என்று திகைப்போடு கேட்டான் பையன்.

பள்ளிக்கூடம் போகமாட்டேன் என்று உன் எதிர்கால வாழ்க்கையையே பாழாக்கிக் கொள்கிறாயே அதைவிட இந்த விலை உயர்ந்த துணி பாழானது பெரிய விஷயமா என்றார் முல்லா.

இந்தச் சொற்கள் அவன் மனத்தில் பெரிய மாறுதலை உண்டாக்கிற்று உடனே புத்தகங்களை எடுத்துக் கொண்டு பள்ளிக்குப் புறப்பட்டான்.

அவன் சென்றபிறகு முல்லா தாம் கிழித்த துணியின் மதிப்புக்கேற்ற விலையைக் கொடுத்து விட்டுப் புறப்பட்டார்.

# பொது அறிவுத் துணுக்குகள்

### தேனீ ஓசனிச்சிட்டு (Bee Hummingbird)



தேனீ ஓசனிச்சிட்டு (Bee Hummingbird) எனப்படும் பாடும் பறவை, உலகிலேயே மிகச்சிறிய பறவை.

ஆண் பறவைகள் சராசரியாக 5.5 செ.மீ (2.2 அங்குலம்) நீளமும், 1.95 கிராம் எடையும் கொண்டவை.

பெண் பறவைகள் சராசரியாக 6.1 செ.மீ (2.4 அங்குலம்) நீளமும் 2.6 கிராம் எடையும் கொண்டவை.


### காண்டாமிருகம் (Rhinoceros)



நிலத்தில் வாழும் விலங்குகளில், யானைக்கு அடுத்தபடியாக மிக அதிக எடையுள்ள விலங்கு காண்டாமிருகம்.

காண்டாமிருகத்திற்கு கூர்மையான பார்வை கிடையாது. அதற்குப் பார்வைத்திறன் சற்று குறைவாகவே இருக்கும். ஆனால், அதற்குக் கேட்புத்திறனும், நுகரும் திறனும் மிக அதிகம்.

### உலகின் அதிவேக மனிதர்கள்
### உசைன் செயிண்ட் லியோ போல்ட்



ஜமைக்கா நாட்டைச் சேர்ந்த, உசைன் போல்ட், 2009 ஆம் ஆண்டு ஜேர்மனியின் பெர்லின் நகரில் நடைபெற்ற 100மீ விரைவு ஓட்டத்திற்கான உலகத் தடகள போட்டியில் கலந்து கொண்டு 9.58 வினாடிகளில் 100 மீற்றர் தொலைவைக் கடந்து உலக சாதனை படைத்தார்.

அதே உலகத் தடகளப் போட்டியில் 200 மீற்றர் விரைவு ஓட்டத்திற்கான போட்டியில், 19.19 வினாடிகள் ஓடி உலக சாதனை படைத்தார்.

இந்த சாதனைகளை வேறெவரும் இன்னும் முறியடைக்காததால், உசைன் போல்ட் இன்னும் உலகின் அதிவேக மனிதராகத் திகழ்கிறார்.

### ப்லாரென்ஸ் டெலாரெஸ் க்ரிப்த் ஜாய்னெர் – உலகின் அதிவேக பெண்மணி



அமெரிக்காவைச் சேர்ந்த ப்லாரென்ஸ் க்ரிப்த் ஜாய்னெர் 1988 ஆம் ஆண்டு, அமெரிக்காவின் இண்டியனாபொலிஸ் நகரில் நடைபெற்ற ஒலிம்பிக் ட்ரையல் போட்டிகளில் பெண்களுக்கான 100மீற்றர் விரைவு ஓட்டத்தில்கலந்துகொண்டு10.49 வினாடிகளில் ஓடி உலக சாதனை படைத்தார். இந்த சாதனையை இன்று வரை யாரும் முறியடிக்கவில்லை.

செந்தமிழ் நாடெனும் போதினிலே - இன்பத்
தேன் வந்து பாயுது காதினிலே - எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே - ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே (செந்தமிழ்)

வேதம் நிறைந்த தமிழ்நாடு - உயர்
வீரம் செறிந்த தமிழ்நாடு - நல்ல
காதல் புரியும் அரம்பையர் போல்இளங்
கன்னியர் சூழ்ந்த தமிழ்நாடு (செந்தமிழ்)

காவிரி தென்பெண்ணை பாலாறு - தமிழ்
கண்டதோர் வையை பொருனைநதி - என
மேவிய யாறு பலவோடத் - திரு
மேனி செழித்த தமிழ்நாடு. (செந்தமிழ்)

முத்தமிழ் மாமுனி நீள்வரையே - நின்று
மொய்ம்புறக் காக்குந் தமிழ்நாடு - செல்வம்
எத்தனை யுண்டு புவிமீதே - அவை
யாவும் படைத்த தமிழ்நாடு (செந்தமிழ்)

நீலத் திரைக்கட லோரத்திலே - நின்று
நித்தம் தவஞ்செய் குமரிஎல்லை - வட
மாலவன் குன்றம் இவற்றிடையே புகழ்
மண்டிக் கிடக்குந் தமிழ்நாடு.

கல்வி சிறந்த தமிழ்நாடு - புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு - நல்ல
பல்வித மாயின சாத்திரத்தின் மணம்
பாரெங்கும் வீசும் தமிழ்நாடு.

வள்ளுவன் தன்னை உலகினுக்கே - தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு - நெஞ்சை
அள்ளும் சிலப்பதி காரமென்றோர் மணி
யாரம் படைத்த தமிழ்நாடு. (செந்தமிழ்)

சிங்களம் புட்பகம் சாவக - மாகிய
தீவு பலவினுஞ் சென்றேறி - அங்கு
தங்கள் புலிக்கொடி மீன்கொடியும் நின்று
சால்புறக் கண்டவர் தாய்நாடு. (செந்தமிழ்)

விண்ணை யிடிக்கும் தலையிமயம் - எனும்
வெற்பை யடிக்கும் திறனுடையார் - சமர்
பண்ணிக் கலிங்கத் திருள்கெடுத்தார் தமிழ்ப்
பார்த்திவர் நின்ற தமிழ்நாடு. (செந்தமிழ்)

சீன மிசிரம் யவனரகம் - இன்னும்
தேசம் பலவும் புகழ்வீசிக் - கலை
ஞானம் படைத்தொழில் வாணிபமும் மிக
நன்று வளர்த்த தமிழ்நாடு.

# RADIANT DAWN

A Sunday Supplement in English to Kalaikkathir

Page I | English for all | Sunday the 11th of Septmber 2022


We welcome students' articles in word for publication
-Editor-
kalaikkathiredu@gmail.com

# The Best Vacation Ever!

**Read the text and then answer the questions.**

Jeff was trying to save up money for a vacation his family was planning to take. He decided to find a summer job. It took several days of thinking. But finally, Jeff thought of an idea. It was a hot, dusty summer, and people's cars would be getting dirty. He would offer to wash cars. The first step in setting up his business was to decide what supplies he would need. He was definitely going to require soap, wax, brushes, buckets, and towels. Jeff's dad gave him permission to use the garden hose if he was careful. By the time Jeff was ready to open for business, he had spent $25.00. If he charged $5.00 for each car wash, he would have to wash more than five cars to make money. Jeff and his friends posted signs everywhere in the neighborhood. When people learned about Jeff's business, many came to have their cars washed. In a few weeks, Jeff had earned $100.00.

**1. Which would be a good title for this text?**

A. Jeff's New Business
B. How to Start Your Own Business
C. The Best Way to Wash Cars
D. Jeff Makes a New Friend



**2. Why does Jeff want to earn money?**

A. He wants to wash cars.
B. He wants money to spend when his family goes on vacation.
C. He wants to buy a bike.
D. He wants to buy a garden hose.

**3. Which definition of posted is used in this text?**

A. mailed B. built
C. displayed D. worked at

**4. Which is a synonym for require?**

A. ask B. buy C. reject D. need

**5. Which word describes the tone of this text?**

A. mean B. silly C. sad D. inspirational

---

Jeff had worked hard for weeks to earn money for his family's vacation. He had washed thirty cars. Each person paid $5.00. He had made $150.00. But he had to deduct the money spent on supplies. Jeff spent $25.00 on supplies. He had earned $125.00. He was thrilled about the vacation and was happy that he had accumulated so much. Now he was ready to make a budget. He estimated that he would want at least $75.00 for a sweatshirt for himself and presents for his friends. He didn't know if there would be arcades at the beach, but in case there were, he wanted $25.00 for games. That left $25.00 for snacks or small souvenirs.

**Which title would tell a reader more about this text?**

A. Snacks and Things B. The Arcade
C. Making a Budget D. Jeff's Allowance

**2. How does Jeff earn his extra money?**

A. babysitting B. washing dogs
C. washing cars D. raking leaves

**3. Which word means a plan for spending money?**

A. budget B. souvenir
C. minimum D. money



**4. What does accumulate mean?**

A. to bring B. to buy
C. to donate D. to collect

**5. Which simile could describe Jeff and his skills with money?**

A. as wise as an owl B. as swift as a bird
C. as dishonest as a thief D. as mean as a snake

---

At dinner one night, Jeff's parents gave him the good news. "We're taking a week-long vacation at the beach," his dad said. Jeff was very excited. He liked swimming and snorkeling and the family hadn't been to the beach in a while. He immediately started making plans.

"When are we leaving?" he wanted to know. "We'll be leaving August 10th," his mom answered. August 10th was eight weeks away; it seemed more like forever. Jeff couldn't imagine waiting that long, but then he realized something. Eight weeks would give him enough time to save up money to take with him on the trip, and that was a good thing. Jeff decided to be patient and make the most of the time he had—he would find a summer job.

**1. What does the first sentence of the text tell the reader?**

A. Jeff gives good news.
B. Jeff and his best friend go on vacation.
C. Jeff gets good news.
D. Jeff argues with his parents.



**2. Who is the main character?**

A. Jeff's brother B. Jeff's dad
C. Jeff's mom D. Jeff

**3. Which word from the text is a conjunction?**

A. he B. that C. but D. long

**4. Which word means calmly?**

A. time B. patiently
C. find D. immediately

**5. In which category does snorkeling belong?**

A. water sports B. food
C. animals D. clothing1.

# The Best Vacation Ever!

Jeff and his family had been looking forward to their vacation for eight weeks. Jeff's mom and dad had rented a beach cottage, and the family would stay there for a whole week. Jeff had earned extra money by washing cars; now he was ready for a break! So the whole family was happy when they got to their beach cottage.

Jeff's mom had packed several bags of groceries in the car, so the first thing the family did when they arrived at the cottage was put the groceries in the refrigerator. They didn't want the food to spoil. Next, everyone brought in suitcases and bags. After that, it was time to unpack everything. Finally, they were ready for their first vacation dinner. Jeff's dad suggested they go to a nearby seafood restaurant, and everyone agreed that was a good idea.

The next day, the family went to the beach. Jeff had brought his snorkeling gear. He spent a few hours looking for interesting fish. At lunchtime, the family found a hamburger stand right by the beach and ate there. After lunch, it was back into the water for more swimming. Jeff's dad had brought his surfboard, and he let Jeff use it for a short while. That night, everyone was too tired to go anywhere, so they fixed sandwiches at their cottage.

On the third day, Jeff finally got the chance to look around the small beachside town. There were all sorts of interesting shops; there was even a video arcade. Jeff was glad he had brought extra money with him. He was able to get a sweatshirt for himself, presents for his friends, and tokens for the video games.



The rest of the vacation was just as enjoyable. Everyone got the chance to swim, shop, relax, and rest in the sand. When the week was over, everyone agreed it had been the best vacation they had ever had.

## Read "The Best Vacation Ever!" and then answer the questions.

***1. Why does the family put the groceries away first?***

A. Jeff's dad is going to cook dinner.
B. The groceries are very heavy.
C. There is no room for their suitcases.
D. They do not want the food to spoil.

***2. Which prediction is most likely?***

A. The family will never go to the beach.
B. The family will go to the beach cottage again.
C. The family will tell their friends they had a terrible time.
D. The family will be glad to leave the beach cottage.

***3. Which purpose for reading is most appropriate?***

A. I want advice on planning a vacation.
B. I want to find out what the best vacation was for the characters.
C. I want to study maps showing vacation areas.
D. I want to read about how to save money for vacation.

***4. What is the second thing the family does after they get to the cottage?***

A. They put the groceries away.
B. They go out to dinner.
C. They go to the beach.
D. They bring in their bags.

***5. When does the family go to the beach?***

A. after the vacation is over
B. after Jeff goes to the arcade
C. after Jeff goes snorkeling
D. on the second day

***6. Which of these is an opinion?***

A. The family went to the beach.
B. Next, everyone brought in suitcases and bags.
C. Finally, they were ready for their first vacation dinner.
D. The rest of the vacation was just as enjoyable.

***7. What does Jeff learn?***

A. Saving money allows you to buy special things.
B. Going on vacation is not always fun.
C. Surfing is a very difficult sport.
D. Snorkeling is only for adults to try.

***8. Which statement reflects a reader's connection to another text?***

A. This reminds me of reading about my favorite fish.
B. This reminds me of a story about a family that has a good time camping.
C. This reminds me of an invitation to a new arcade opening in town.
D. This reminds me of a nonfiction book about how to wash cars.

# The Ant and the Dove



One hot day, an ant was searching for some water After walking around for some time, she came to a soding To reach the spring she had to dimb up a blade of grass. While making her way up, she slipped and fell into the water She could have drowned it a dove up a near-by ree had not seen her. Seeing that the art was in ouble the dove quickly clicked of a leat and dropped it into the wale neer the strug-gling and The ant moved to wards the leaf and dimbed up there Soon It carried her safely to dry ground. Just at that time, a hunter nearby was throwing out his ne towards the dove hoping to trapit Guessing what he was about to do, the ant quickly bt him on the heel Feeling the pain, the hunter dropped his net The dove was quick to ty away to safety.

*One good turn deserves another.*

# Who is Liz Truss? From teenage Lib Dem to Tory PM



Liz Truss has been appointed the UK's new prime minister by the Queen shortly after Boris Johnson had tendered his resignation to Her Majesty. But where did she come from and what makes her tick?

A Remain supporter who has become the darling of the Brexit-backing Conservative right wing.

A former Liberal Democrat activist, who marched against Margaret Thatcher in the 1980s, but who now claims to be the keeper of the Thatcherite flame.

It is fair to say that Mary Elizabeth Truss has been on a political journey.

She may not be a household name like her predecessor at Number 10 - and she was not the first choice of Tory MPs to replace Boris Johnson.

But her promise to return to fundamental Conservative values - cutting taxes and shrinking the state - proved to be exactly what party members, who got the final say over who took over from Mr Johnson, wanted to hear.

And, crucially, as foreign secretary she remained loyal to Mr Johnson until the bitter end as other ministers deserted him, winning her favour with Johnson loyalists.

Grassroots Tory supporters of Liz Truss see in her the steadfast, tenacious and determined qualities they admired in Margaret Thatcher - an image Ms Truss herself has tried to cultivate.

But despite her shifting political positions and allegiances over the years, these words also come up frequently when friends and family are asked to describe her character - along with "ambitious".



**Liz Truss: The basics**

Age: 47
Place of birth: Oxford
Home: London and Norfolk
Education: Roundhay School in Leeds, Oxford University
Family: Married to accountant Hugh O'Leary with two teenage daughters
Parliamentary constituency: South West Norfolk
2px presentational grey line

"She's a very opinionated person in terms of what she wants," said her brother Francis in 2017, when recalling his older sister's teenage dalliance with vegetarianism.

"When you go to a restaurant, you might be 14 but she was precocious about what she wants, what she didn't want."

When the family played Cluedo or Monopoly, "she was someone who had to win," added Francis in a BBC Radio 4 profile of Truss.

"She would create some special system to work out how she could win."

**Newscast profiles Liz Truss**

Maurizio Giuliano, a university contemporary who first met her at a Liberal Democrat event, says she stood out from the other students.

"I remember her being very well-dressed compared to other 18 to 19-year-olds. She also had the demeanour of a real adult compared to what we were at that age.

"She was forceful and opinionated and she had very strong views."

Serious political debate was the order of the day in the Truss household, according to Francis, the youngest of her three younger brothers.

"You didn't sit around talking about the latest Megadrive game at the dinner table, it was much more issues, political campaigns etc," he told Radio 4's Profile programme.

It must have felt inevitable that she would get involved in politics in some capacity when she grew up, but no-one in her family would have predicted the path she eventually took.

Born in Oxford in 1975, Ms Truss has described her father, a mathematics professor, and her mother, a nurse, as "left-wing".

As a young girl, her mother took her on marches for the Campaign for Nuclear Disarmament, an organisation vehemently opposed to the Thatcher government's decision to allow US nuclear warheads to be installed at RAF Greenham Common, west of London.

Though she is now proudly a Conservative from Leeds, back then she was a Scottish liberal.

The family moved to Paisley, just west of Glasgow, when Ms Truss was four-years-old.

In a BBC interview, she recalled shouting "Maggie, Maggie, Maggie - oot, oot, oot," in a Scottish accent, as she took part in marches.

The Truss family campaigned for nuclear disarmament

The Truss family later decamped to Leeds, where she attended Roundhay, a state secondary school. She has described seeing "children who failed and were let down by low expectations" during her time there.

Some of Ms Truss's contemporaries at Roundhay have disputed her account of the school, including Guardian journalist Martin Pengelly, who wrote: "Perhaps she is selectively deploying her upbringing, and casually traducing the school and teachers who nurtured her, for simple political gain."

One Roundhay school mate, who did not want to be named, told the BBC: "It was a really good school, really supportive teachers. Quite a lot of us have gone on to good universities and good careers."

Although not part of her friendship group, he has clear memories of the young Truss.

"She was quite studious, serious," he says, with a "heavy social conscience" and part of a group that were into environmentalism.

"I remember a school trip to Sellafield and her asking difficult questions and giving them a grilling. I remember that quite distinctly."

At Oxford University, Ms Truss read philosophy, politics and economics. Friends recall a well-liked, if frenetic student.

The teenage Truss caused a stir at the Lib Dem conference with her anti-monarchy stance

"I remember her determination which was very impressive for me," says Jamshid Derakhshan, who was studying for a postgrad degree in mathematics when Truss was an undergraduate.

"She was very quick with everything. Going around the college quickly, being everywhere."

As to what sort of prime minister his old friend will make, Dr Derakhshan says: "My feeling is she's not going to be stuck with one particular idea, she's very flexible in her mind and what will be best for the time."

Ms Truss was involved in many campaigns and causes at Oxford but devoted much of her time to politics, becoming president of the university's Liberal Democrats.

At the party's 1994 conference, she spoke in favour of abolishing the monarchy, telling delegates in Brighton: "We Liberal Democrats believe in opportunity for all. We do not believe people are born to rule."

She also campaigned for the decriminalisation of cannabis.

"Liz had a very strong radical liberal streak to her," said fellow Lib Dem student Alan Renwick in 2017.

"We were setting up the Freshers Fair stall, Liz was there with a pile of posters, saying 'Free the Weed' and she just wanted the whole stall to be covered with these posters.

"I was scurrying around after Liz trying to take these down and put up a variety of messages, rather than just this one message all over the stall."

Her Instagram posts have seen a transformation, from candid shots posing with rhubarb... to striding out of high-level meetings flanked by assistants

Her conversion to conservatism, towards the end of her time at Oxford is said to have shocked her left-leaning parents, but for Mark Littlewood, a fellow Oxford Lib Dem, it was a natural progression.

"She's been a market liberal all of her adult life," according to Mr Littlewood, who is now director general of the libertarian, free market think-tank, the Institute of Economic Affairs.

"Her political career reflects her ideology - she has always been highly sceptical of big government and privileged institutions who think they know best," Mr Littlewood said.

She clearly changed parties, but that "was a judgement about what's the best and most likely vehicle for her to succeed in politics and get what she wants to get done," Mr Littlewood said.

Nevertheless, what she has described as her "dubious past" came back to haunt her as she tried to convince Tory members she was truly one of them.

(see page 11)

# Who is Liz Truss? From teenage Lib Dem to Tory PM

At a leadership hustings in Eastbourne, some in the audience jeered, as she told them: "We all make mistakes, we all had teenage misadventures, and that was mine.

"Some people have sex, drugs and rock and roll, I was in the Liberal Democrats. I'm sorry."

She had become a Conservative because she had met like-minded people who shared her commitment to "personal freedom, the ability to shape your own life and shape your own destiny," she explained.

After graduating from Oxford she worked as an accountant for Shell, and Cable & Wireless, and married fellow accountant Hugh O'Leary in 2000. The couple have two children.

Ms Truss stood as the Tory candidate for Hemsworth, West Yorkshire, in the 2001 general election, but lost. Ms Truss suffered another defeat in Calder Valley, also in West Yorkshire, in 2005.

But, her political ambitions undimmed, she was elected as a councillor in Greenwich, south-east London, in 2006, and from 2008 also worked for the right-of-centre Reform think tank.

Conservative leader David Cameron put Ms Truss on his "A-list" of priority candidates for the 2010 election and she was selected to stand for the safe seat of South West Norfolk.

But she quickly faced a battle against de-selection by the constituency Tory association, after it was revealed she had had an affair with Tory MP Mark Field some years earlier.

The effort to oust her failed and Ms Truss went on to win the seat by more than 13,000 votes.

She co-authored a book, Britannia Unchained, with four other Conservative MPs elected in 2010, which recommended stripping back state regulation




to boost the UK's position in the world, marking her out as a prominent advocate of free market policies on the Tory benches.

During a BBC leadership debate, she was challenged about a comment in Britannia Unchained, describing British workers as "among the worst idlers in the world". She insisted she had not written it.

In 2012, just over two years after becoming an MP, she entered government as an education minister and in 2014 was promoted to environment secretary.

At the 2014 Conservative conference, she made a speech in which she said, in an impassioned voice: "We import two-thirds of our cheese. That. Is. A. Disgrace."

The speech was little noticed at the time, but it has taken on a life of its own on social media, attracting much mockery and becoming widely shared.

Two years later came arguably the biggest political event in a generation - the EU referendum.

Ms Truss campaigned for Remain, writing in the Sun newspaper that Brexit would be "a triple tragedy - more rules, more forms and more delays when selling to the EU".

However, after her side lost, she changed her mind, arguing that Brexit provided an opportunity to "shake up the way things work".

Becoming the first female Lord Chancellor and justice secretary in 2016

Under Theresa May's premiership, she became the first female Lord Chancellor and justice secretary, but she had several high-profile clashes with the judiciary.

Her initial failure to defend judges after they were branded "enemies of the people" by the Daily Mail, when they ruled Parliament had to be given a vote on triggering Brexit, upset the legal establishment.

She later issued a statement supporting the judges, but she was criticised by Lord Chief Justice Lord Thomas of Cwmgiedd as "completely and absolutely wrong" for not speaking out sooner.

After 11 months as justice secretary, she was demoted to chief secretary to the Treasury.

When Boris Johnson became prime minister in 2019, Ms Truss was moved to international trade secretary - a job which meant meeting global political and business leaders to promote UK PLC.

Liz Truss held a frosty joint press conference with Russian Foreign Minister Sergei Lavrov, in the weeks before the invasion of Ukraine

In 2021, aged 46, she moved to one of the most senior jobs in government, taking over from Dominic Raab as foreign secretary.

In this role she has sought to solve the knotty problem of the Northern Ireland Protocol, by scrapping parts of a post-Brexit EU-UK deal - a move the EU fiercely criticised.

She secured the release of two British-Iranian nationals who had both been arrested and detained in Iran.

And when Russia invaded Ukraine in February she took a hard line, insisting all of Vladimir Putin's forces should be driven from the country.



But she faced criticism for backing people from the UK who wanted to fight in Ukraine.

Her decision to pose for photographs in a tank while visiting British troops in Estonia, was seen as an attempt to emulate Margaret Thatcher, who had famously been pictured aboard a Challenger tank in 1986. It also fuelled speculation that she was on leadership manoeuvres.

Claims she was deliberately trying to channel Thatcher grew even louder when she posed for a photograph in a white pussy bow collar of the kind favoured by the Iron Lady.

But she has always dismissed such criticism, telling GB News: "It is quite frustrating that female politicians always get compared to Margaret Thatcher while male politicians don't get compared to Ted Heath."

Liz Truss posed for official shots in a tank whilst visiting British troops in Estonia last year

Ms Truss's campaign for the party leadership was not free of controversy.

Pressed on how she would tackle the cost-of-living crisis, she said she would focus her efforts on "lowering the tax burden, not giving out handouts".

She has been forced to scrap a plan to link public sctor pay to regional living costs by a backlash from senior Tories who said it would mean lower pay for millions of workers outside London.

And she called Scotland's First Minister Nicola Sturgeon an "attention seeker", adding it was best to "ignore her".

She also got into a spat with French President Emmanuel Macron, who accused her of "playing to the gallery" at a leadership hustings. Asked if Mr Macron was a "friend or foe", she had said the jury was still out.

But it was domestic issues, or rather one domestic issue, that dominated the sometimes fractious leadership contest with Rishi Sunak.

Ms Truss's response to the cost-of-living crisis, promised within days of taking office, is likely to define her premiership and her chances of gaining a mandate of her own at the next general election.

காலைக்கதிர் வார இதழ் Kalaikkathir

# சூரிய நமஸ்காரம்



சூரிய நமஸ்காரம் என்பது சூரியனை வணங்குதல் என்று பொருள். இது பண்டைய காலம் முதலே, சூரியனை வழிபடுதல் முறைகளில் ஒன்றாக கருதப்படுகிறது. ஆசனம், பிராணயாமம், மந்திரம் மற்றும் சக்கர தியானம் ஆகியவற்றை ஒன்றிணைத்து பல்வேறு விதங்களில உடல் பயிற்சிகளின் எல்லைகளைக் கொண்ட ஒரு முழுமையான உடற்பயிற்சியாக சூரிய நமஸ்காரம் உள்ளது. சூரிய நமஸ்காரம் பன்னிரெண்டு ஆசனங்கள் ஒருங்கிணைந்த ஆசன மூறை ஆகும்.

சூரிய நமஸ்காரம் சுவாசம், உடல் மற்றும் மனம் ஆகிய மூன்றையும் ஒருங்கிணைத்து செய்யும் பயிற்சிமுறை. சில காரணங்களால் உடல் பயிற்சியோ அல்லது யோகாவோ செய்ய முடியாதவர்கள் சூர்ய நமஸ்காரம் செய்வதன் மூலம் சிறந்த பலனை பெறுவர். சூர்ய நமஸ்காரத்தில் உள்ள ஆசனங்கள் உடலில் உள்ள பெரும்பாலான உறுப்புகளின் சீரான செயல்பாட்டுக்கு உதவுகிறது.

சூரிய நமஸ்காரம் நம் முன்னோர்கள் நமக்கு தந்த ஒரு அற்புத பயிற்சி. நாம் இயற்கையை விட்டு விலகி இருக்கும் இந்த நவீன காலத்தில் சூரிய நமஸ்காரம் நமது உடல், மனம் போன்றவற்றினை நன்கு செழுமைப்படுத்த சூரிய நமஸ்காரம் உதவுகிறது.

**சூரிய நமஸ்காரம் செய்யும் முறை**

மேலே குறிப்பிட்ட பன்னிரெண்டு நிலைகள் செய்த பின்னர் சாதாரண நிலைக்கு வர வேண்டும்.

1. பிராணமாசனம் செய்முறை: கால்களை ஒன்றாக வைத்தபடி நிற்கவும். கைகளை தலைக்கு மேல் தூக்கவும். கைகளை ஒன்றாக இணைத்து உங்களது மார்புக்கு நேராகக் கொண்டு வரவும். கைகளை வணங்குவது போல் கொண்டு வரவும். மீண்டும் கைகளை மேலாகத் தூக்கியபடி கீழே இறக்கவும்.

2. அஸ்ட உட்டனாசனம் செய்முறை: மூச்சை உள் இழுத்தபடி, கைகளை மேலேத் தூக்கவும். கைகள் உங்கள் காதுகளை உராய்ந்தபடி இருக்க வேண்டும். மெதுவாக கைகளை பின்புறமாக வளைக்கவும். கைகளுக்கு இணையாக தலையும் கவிழ வேண்டும்.

3. அஸ்டபாதாசனம் செய்முறை: மூச்சை வெளியே விட்டபடி மீண்டும் பழைய நிலைக்குத் திரும்பவும். கைகளை கால்களுக்கு இணையாக தரையைத் தொடவும். தலை கால்களின் முட்டியைத் தொட்டபடி இருக்க வேண்டும். இதே நிலையில் ஒரு சில விநாடிகள் இருக்க வேண்டும். இது அஸ்டபாதாசனம்

4. ஏகபாதபிரஸர்நாசனம் செய்முறை: மூச்சை உள் இழுத்தபடி உங்களது வலது காலை பின்னோக்கி வைக்கவும். அதே சமயம் இரண்டு கைகளையும் இடது காலுக்கு இணையாக ஊன்றவும். தலையை மேல் நோக்கியவாறு பார்க்கவும். இதே நிலையில் ஒரு சில விநாடிகள் இருக்கவும்.

5. தந்தாசனம் செய்முறை: மூச்சை வெளியே விட்டபடி பின்னோக்கி செலுத்திய வலது காலுக்கு இணையாக இடது காலையும் எடுத்துச் செல்லவும். கைகளை நன்கு நீட்டி ஊன்றவும். இடுப்புப் பகுதி நன்கு உயர்ந்த நிலையில் இருக்க வேண்டும். அதாவது வளைவு தூண் போன்று உங்கள் உடல் அமைப்பு இருக்க வேண்டும்.

6. அஷ்டாங்க நமஸ்காரம் செய்முறை: மீண்டும் மூச்சை உள்ளிழுத்தபடி உடல் தரையில் படுமாறு வைக்கவும். கால்கள், முட்டி, கைகள், மார்பு மற்றும் நெற்றி ஆகியவை தரையை தொட வேண்டும். இடுப்புப் பகுதி மட்டும் சற்று உயர்ந்து இருக்க வேண்டும். இப்போது மூச்சை தற்காலிகமாக நிறுத்திவைக்க வேண்டும்.

7. புஜங்காசனம் செய்முறை: மூச்சை உள்ளிழுத்தபடி தலையை பின்புறமாக நீட்டவும். உங்கள் முதுகை எவ்வளவு முடியுமோ அவ்வளவிற்கு பின் பக்கமாக வளைக்கவும். இதைத்தான் புஜங்காசனம் என்று அழைப்பர்

8. அதோ முக்கா ஸ்வானாசனம் செய்முறை: மூச்சை வெளியே விட்டபடி, மெதுவாக கைகளை உயர்த்தவும். அதற்கேற்ப இடுப்பு மற்றும் தலையையும் உயர்த்தி மீண்டும் வளைவுத் தூண் அமைப்பை ஏற்படுத்தவும்.

9. ஆஷ்வா சஞ்சலானாசனம் செய்முறை: மெதுவாக மூச்சை உள்ளே இழுத்தபடி, வலது காலை ஒரு அடிக்கு முன்னாடி முட்டியை மடக்கியபடி கொண்டு வந்து வைக்கவும். தலையை மேலாகத் தூக்கி கைகளை நேராக வைக்கவும்.


10. உட்டனாசனம் செய்முறை: வெளியே மூச்சை விட்டபடி, வலது காலுக்கு இணையாக இடது காலையும் மடக்கியபடி கொண்டு வரவும். தலை முட்டியைத் தொட்டபடி இருக்க வேண்டும்.

11. அஸ்ட உட்டனாசனம் செய்முறை: மூச்சை உள்ளே இழுத்தபடி மெதுவாக கைகளை உயர்த்தவும். பின்புறமாக வளைந்து கைகளைப் பார்த்தபடி தலை இருக்க வேண்டும் - மூச்சை உள்ளிழுத்தல்.

12. பிராணமாசனம் செய்முறை: அட்டவணையில் முதலில் கூறிய பிராணமாசனம் நிலையில் மீண்டும் வணக்கம் செய்யும் நிலைக்கு வர வேண்டும்.

**யார் செய்யலாம்?**

சூரிய நமஸ்காரம் ஆண், பெண், சிறுவர், சிறுமியர் அனைவரும் செய்யலாம். தனியாகவும் கூட்டாகவும் செய்யலாம். ஆண்டு முழுவதும் செய்யலாம்.




சூரிய நமஸ்காரம் செய்வதற்கு ஒரு நாளில் மூன்று முதல் பத்து நிமிடங்களே போதும். இது உடம்பு முழுமைக்கும் பயிற்சி அளிக்கின்றது.

சூரிய நமஸ்காரத்திற்குச் செலவொன்றுமில்லை. பளுவான கருவிகள் எதுவும் தேவையில்லை. வேண்டியதெல்லாம் நான்கு சதுர மீற்றர் இடம் தான்.

**எவ்வளவு நேரம் செய்யலாம்?**

சூரிய நமஸ்காரத்தைப் பழகப் பழக இன்பம் அதிகரிக்கும். முதலில் சுலபமான உடல் நிலைகளைப் பழக வேண்டும். ஆரம்பத்தில் பூரண வெற்றியை எதிர்பார்க்கக் கூடாது. போகப் போக இலகுவாக இயக்கங்கள் முழுமையாக வரும். ஆரம்பத்தில் ஒன்று அல்லது இரண்டு முறை செய்யலாம். பின் உங்களால் இயன்ற முறை செய்யலாம். ஆனால் அதிக வலிவுடனோ அல்லது மிகவும் சிரமப்பட்டு செய்வது மிகவும் தவறு.

கர்ப்பிணிகள் 3 மாதங்கள் வரை செய்யலாம். பிறகு நிறுத்தி விட வேண்டும். குழந்தை பிறந்த பின் தக்க ஆலோசனையுடன் சிறிது சிறிதாகப் பயிற்சியை அதிகரிக்க வேண்டும்.

**எப்பொழுது செய்யவேண்டும்?**

காலை நேரம் சிறந்தது. முடியாதவர்கள் மாலையிலும் செய்யலாம். சாப்பிட்ட பின் குறைந்தது இரண்டு மணி நேரமாவது கழித்து தான் செய்ய வேண்டும். அலுவலக வேலையால் களைத்துப் போனவர்களுக்குக் கூட பத்து பன்னிரெண்டு நமஸ்காரங்கள் டானிக் போல உயிரூட்டும். தனி அறையில் அமைதியில் செய்வது புத்துணர்வை வளர்க்கும். வேண்டியதெல்லாம் ஒரு சிறு ஜமுக்காளமும் துண்டும் தான்.

**எச்சரிக்கை**

முதுகுப் புறத்தில் பிரச்சினை இருந்தாலோ, இடுப்பு எலும்புப் பிரச்சினை இருப்பவர்களும் இந்த ஆசனத்தை செய்ய வேண்டாம். சூரிய நமஸ்காரம் செய்வதற்கு முன்பு தெளிவான அறிவுரையைப் பெற வேண்டும்.

**சூரிய நமஸ்காரத்தின் பயன்கள்**

இதயத்தை முடுக்கிவிட்டு இரத்த ஓட்டத்தை வேகப்படுத்தி உடலின் ஆரோக்கியத்தை நிலைநாட்டுவதில் சூரிய நமஸ்காரம் சிறந்த இடம் பெறுகின்றது. இது இரத்தக் கொதிப்பை கட்டுப்படுத்தும். இதயத் துடிப்பைச் சமன் செய்யும். கை, கால் போன்ற தூரவெளி உறுப்புகளுக்குச் சூடு கொடுத்துக் காக்கும்.

சூரிய நமஸ்காரம் ஜீரண மண்டலத்திற்கு உயிரூட்டி ஆற்றலை அளிக்கின்றது. கல்லீரல், வயிறு, மண்ணீரல், குடல்கள் எல்லாம் கசக்கி கசக்கிப் பிடித்து விடுவது போன்று மசாஜ் செய்யப்படுகின்றன. மலச்சிக்கல் பிரச்சினை சரியாகிவிடுகிறது.

**பசியின்மை பறந்தோடுகின்றன**

சூரிய நமஸ்காரத்தில் உடல் அசைவுகளும் மூச்சு ஓட்டமும் இணக்கமாக நடைபெறுகின்றன. நுரையீரல்களில் காற்றோட்டம் தாராளமாகின்றது. இரத்தம் உயிர்க் காற்றால் நலம் பெறுகின்றது. ஏராளமான கரிசக்காற்றையும் பிற நச்சுப் பொருள்களையும் மூச்சு மண்டலத்திலிருந்து வெளியேற்றுவதன் மூலம் சூரிய நமஸ்காரம் உடலுக்குப் பெரும் நன்மை விளைவிக்கின்றது.

சிம்பதட்டிக், பாராசிம்பதட்டிக் நரம்புகளின் செயல்களை நெறிப்படுத்துவதன் மூலம் நல்ல ஓய்வுக்கும் உறக்கத்திற்கும் உதவுகின்றது. இதனால் நினைவாற்றல் அதிகரிக்கின்றது.

பிற உயிரணுக்களைக் காட்டிலும் நரம்பு உயிரணுக்கள் மிக மிக தாமதமாகவே விழிப்புற்று உயிராற்றல் பெறுகின்றன. இருப்பினும் இடையறாத முறையான பயிற்சியாலும் சலிக்காத முயற்சியாலும் சிறுகச் சிறுக நரம்பு உயிரணுக்கள் தத்தம் சாதாரணக் காரியங்களைச் செய்யத்தக்க அளவில் வலுவடைகின்றன.

சூரிய நமஸ்காரத்தில் கழுத்து முன் பின் வளைகின்றது. இதனால் தைராயிட், பாராதைராயிட் சுரப்பிகளுக்கு இரத்தம் கிடைக்கின்றது. அவை செயல்படுவதனால் எல்லா எண்டோக்கிரைன் சுரப்பிகளும் தமக்குரிய இயல்பான காரியங்களைச் செய்கின்றன.

தோல் புத்துணர்வு பெற்றுப் பொலிவடைகின்றது. சூரிய நமஸ்காரத்தை முறைப்படி செய்யும் போது வியர்வை உண்டாகும். ஏராளமாக உடலில் உள்ள நச்சுப்பொருள்கள் தோலின் வழியே வெளியேறும். நன்றாக வியர்க்கும் வரை இப்பயிற்சி செய்வது நல்லதென சூரிய நமஸ்காரத்தைப் பிரபலப்படுத்திய அவுண்ட் அரசர் கூறுகின்றார். வியர்வை பத்துப் பதினைந்து நிமிடங்களிலேயே வெளிவருவதை அனுபவத்தில் அறியலாம். தோலின் மூலம் வியர்வை வெளிவரும் அளவுக்கு உடல்நலம் ஓங்கும்.

சூரிய நமஸ்காரத்தில் உடலில் உள்ள தசைகள் அனைத்தும் வலுவடைகின்றன. குறிப்பாக கழுத்து, தோள், கை, மணிக்கட்டு, வயிற்றுச்சுவர், தொடை, கெண்டைக்கால், கணுக்கால் முதலிய பகுதிகளில் தசைகள் பயிற்சியால் உரம் பெறுகின்றன.

கொழுப்பால் வயிறு, தொடை, இடுப்பு, கழுத்து, நாடி முதலிய இடங்களில் உண்டாகும் மடிப்புகள் மறையும்.

தோல், நுரையீரல், குடல், சிறுநீரகம் முதலிய பகுதிகள் வழியே சரியாக மலம் (கழிவுப் பொருட்கள்) வெளியேறுவதால் உடலில் விரும்பத் தகாத துர்நாற்றம் ஏற்படுவதில்லை.


சூரிய நமஸ்காரத்தில் உடல் சரியான அளவில் அமையப் பெறுவதால் அது எந்த விளையாட்டுப் பயிற்சி வேலைகளுக்கும் எப்போதும் தயார் நிலையில் இருக்கும். இளமை, நலம், அழகு மூன்றும் ஒருங்கே அமைந்து உடலுக்கும் உயிருக்கும் அழியா இன்பத்தைக் கொடுக்க வல்லது.





# கோள்கள் – சூரியக் குடும்பம்

(Planets in the Solar System)




நம் பூமி உட்பட சூரியனை மொத்தம் எட்டு கோள்கள் சுற்றி வருகின்றன. அவற்றைப்பற்றி ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.

**சூரியன்**

சூரியக்குடும்பத்திலேயே மிகப் பெரியது சூரியன். இது ஒரு மிகச்சிறிய விண்மீன். இது முழுவதும் வாயுக்களால் ஆனது. சூரியனின் காந்தவிசை இக்குடும்பத்திலுள்ள அனைத்து கோள்கள் மற்றும் பிற பொருள்களை தன் புலத்திற்குள் வைத்துள்ளது.

புதன் (மெர்குரி / Mercury)
வெள்ளி (வீனஸ் / Venus)
பூமி (எர்த் / Earth)
செவ்வாய் (மார்ஸ் / Mars)
வியாழன் (ஜுபிடர் / Jupiter)
சனி (சாடர்ன் / Saturn)
யுரேனஸ் (Uranus)
நெப்டியூன் (Neptune)

**1. புதன் (மெர்குரி / Mercury)**

சூரியனுக்கு மிக அருகில் உள்ள கோள் புதன் (மெர்குரி / Mercury).

இது சூரியக்குடும்பத்தில் உள்ள கோள்களிலேயே மிகச் சிறியது.

இக்கோளுக்கு நிலாக்கள் ஏதும் இல்லை .

இது சூரியனை ஒரு முறை சுற்றி வர எடுத்துக் கொள்ளும் கால அளவு 88 நாட்கள். அதாவது, பூமியின் 88 நாள்கள் புதனின் ஒரு ஆண்டுக்குச் சமம்.

சூரியனுக்கு மிக அருகில் இருப்பதால், சூரியனின் பளிச்சிடும் ஒளிக்கிடையே இதைப் பெரும்பாலான நேரங்களில் காண முடியாது. ஆனால், அதிகாலையில் சூரியன் தோன்றும் முன்னர் அல்லது மாலையில் சூரியன் மறைந்த பின்னர், புதன் கோளைத் தொடுவானத்தில் பார்க்க முடியும்.

**2. வெள்ளி (வீனஸ் / Venus)**

சூரியனிலிருந்து இரண்டவதாக உள்ள கோள் வெள்ளி (வீனஸ் / Venus).

சூரியனைச் சுற்றும் கோள்களிலேயே அதிக வெப்பமான கோள் இது தான். ஏனெனில், இக்கோளில் நிறைந்துள்ள கார்பன் டைஆக்சைடு வாயு சூரியனின் வெப்பத்தை அதிக அளவில் உள்வாங்கிக் கொள்கிறது.

இது பூமிக்கு மிக அருகில் உள்ள கோள்.

இரவில் அதிக அளவில் பளிச்சிடும் ஒளி வீசும் கோள் வெள்ளிதான்.

இதற்கென்று நிலாக்கள் ஏதும் இல்லை.

வெள்ளி தன் அச்சில் கிழக்கிலிருந்து மேற்காகச் சுழல்கிறது. இதனால், வெள்ளியில் சூரியன் மேற்கில் தோன்றி, கிழக்கில் மறையும்.

இது சூரியனை ஒரு முறை சுற்றி வர எடுத்துக் கொள்ளும் கால அளவு 225 நாள்கள். அதாவது, பூமியின் 225 நாள்கள் வெள்ளியின் ஒரு ஆண்டுக்குச் சமம்.

இது அதிகாலையில் சூரியன் தோன்றும் முன்னர் கிழக்கிலும், மாலையில் சூரியன் மறைந்த பிறகு மேற்கிலும் வானில் தோன்றும். இது விண்மீன் இல்லையென்றாலும், இதனை காலை விண்மீன் என்றும் மாலை விண்மீன் என்றும் அழைப்பர்.

**3. பூமி ( Earth)**

சூரியனிலிருந்து மூன்றாவதாக உள்ள கோள் பூமி. சூரியனுக்கும் பூமிக்கும் இடையேயுள்ள தொலைவு ஏறத்தாழ 150,000,000 கி.மீ. (150 மில்லியன் கி.மீ). அதாவது 15,00,00,000 கி.மீ (15 கோடி கி.மீ).

சூரியக் குடும்பத்தில் உயிர்கள் வாழும் ஒரே கோள் என்று கருதப்படுவது பூமி மட்டும்தான்.

பூமியில் உயிர்கள் காணப்படுவதற்கான காரணங்கள்:

சூரியனிலிருந்து தகுந்த தொலைவில் இருப்பதால், பூமியின் வெப்பநிலை உயிர்கள் வாழ்வதற்கேற்றவாறு உள்ளது.

**பூமியில் உள்ள நீர்**

உயிர்கள் வாழ்வதற்கேற்ற வளிமண்டலம் மற்றும் ஓசோன் அடுக்கு.

பூமியை ஒரு நிலா சுற்றி வருகிறது.

விண்வெளியிலிருந்து பூமியைப் பார்க்கும்போது நீலம் மற்றும் பச்சை நிறமாகக் காட்சி அளிக்கும். இதற்குக் காரணம், கடல் மற்றும் நிலப்பரப்பின் மீது விழும் சூரிய ஒளியின் எதிரொளிப்பே ஆகும்.

**4. செவ்வாய் (மார்ஸ் / Mars)**

சூரியனிலிருந்து நான்காவதாகவும், பூமிக்கு அடுத்தபடியாகவும் உள்ள கோள் செவ்வாய் (மார்ஸ் / Mars).

இது லேசான சிவப்பு நிறத்தில் உள்ளதால் சிவப்பு கோள் (Red Planet) எனவும் அழைக்கப்படுகிறது. இதற்குக் காரணம் செவ்வாயில் அதிக அளவில் இரும்பு ஆக்சைடு (Iron Oxide) உள்ளது.

இது சூரியனை ஒரு முறை சுற்றி வர எடுத்துக் கொள்ளும் கால அளவு 687 நாள்கள்.

இதன் ஈர்ப்பு விசை பூமியின் ஈர்ப்பு விசையில் 0.375 பங்கு தான் உள்ளது.

இதன் வளி மண்டலம் பெரும்பாலும் கார்பன் டை ஆக்சைடாலும் சிறிது நீராவியாலும் ஆனது.

இதை இரண்டு நிலாக்கள் சுற்றி வருகின்றன.

**5. வியாழன் (ஜுபிடர் / Jupiter)**

சூரியனிலிருந்து ஐந்தாவது இடத்தில் இருக்கும் கோள் வியாழன் (ஜுபிடர் / Jupiter).

இது சூரியனைச் சுற்றி வரும் கோள்களிலேயே மிகப் பெரிய கோள் ஆகும். நம் பூமியைப் போல் 1300 பூமிகளை இதனுள் அடக்க முடியும்.

வியாழனின் நிறை பூமியின் நிறையைப் போல் 318 மடங்கு அதிகம்.

இது ஒரு வாயுக்கோள். இதன் வளிமண்டலம் பெரும்பாலும் ஹைட்ரஜன் மற்றும் ஹீலியம் வாயுக்களால் ஆனது.

இதைச்சுற்றி தூசித் துகள்களாலான வளையங்கள் உள்ளன. ஆனால் அவை மங்கிய வளையங்களாதலால் அவற்றை பார்ப்பது கடினம்.

வியாழனில் ஒரு நாள் என்பது 10 மணி நேரங்களைக் கொண்டது.

இது சூரியனை ஒரு முறை சுற்றி வர 12 ஆண்டுகள் ஆகும்.

75 க்கும் மேற்பட்ட நிலாக்கள் வியாழனைச் சுற்றி வருகின்றன.

**6. சனி (சாடர்ன் / Saturn)**

சூரியனிலிருந்து ஆறாவது இடத்தில், அதாவது வியாழனுக்கு அடுத்து இருக்கும் கோள் சனி (சாடர்ன் / Saturn).

இது மஞ்சள் நிறமாகக் காட்சியளிக்கும்.

வியாழனுக்கு அடுத்தபடியாக, சூரியக்குடும்பத்தில் உள்ள கோள்களில் இரண்டாவது மிகப்பெரிய கோள் இது.

சனியைச் சுற்றி அழகிய ஏழு வளையங்கள் உள்ளன.

இக்கோளில் ஒரு நாள் என்பது 10.7 மணி நேரங்களைக் கொண்டது.

இது சூரியனை ஒருமுறை சுற்றிவர 29 ஆண்டுகள் ஆகிறது.

சனிக்கோளை 53 நிலாக்கள் சுற்றி வருகின்றன. மேலும் 29 நிலாக்கள் இதைச் சுற்றி வருவதாகக் கருதப்படுகிறது.

**7. யுரேனஸ் (Uranus)**

சூரியனிலிருந்து ஏழாவது இடத்தில், அதாவது சனிக்கு அடுத்து இருக்கும் கோள் யுரேனஸ் (Uranus).

வெள்ளியைப் (வீனஸ்) போல் யுரேனசும் கிழக்கிலிருந்து மேற்கில் தன் அச்சில் சுழல்கிறது.

இது தன் அச்சில் மிக அதிகமாகச் சாய்ந்துள்ளது. இதனால், இது தரையில் உருண்டு செல்லும் பந்து போல் கிடைமட்டமாக, அதாவது பக்கவாட்டில் சுழன்று கொண்டே சூரியனைச் சுற்றி வருகிறது.

இது மிகப்பெரிய பனிக்கோள்.

இதைச் சுற்றி 13 வளையங்கள் உள்ளன.

இது பூமியைப் போல் 4 மடங்கு பெரியது.

இக்கோளை 27 நிலாக்கள் சுற்றி வருகின்றன.

**8. நெப்டியூன் (Neptune)**

இறுதியாக, சூரியனிலிருந்து எட்டாவது இடத்தில், அதாவது யுரேனசுக்கு அடுத்து இருக்கும் கோள் நெப்டியூன் (Neptune).

இது தனது அச்சில் சுற்றிக்கொள்ள எடுத்துக் கொள்ளும் காலம் 17 மணி நேரம். அதாவது, இதன் ஒரு நாள் 16 மணி நேரத்துக்குச் சமம்.

இது சூரியனைச் சுற்றிவர 165 ஆண்டுகள் ஆகிறது.

இது 14 நிலாக்களைக் (துணைக்கோள்கள்) கொண்டது.

**மீச்சிறு கோள்கள் (ஆஸ்ட்ராய்ட்கள் - Asteroids)**

செவ்வாய்க்கும் வியாழனுக்கும் நடுவில் பத்து லட்சத்திற்கும் மேற்பட்ட மீச்சிறு கோள்கள் சூரியனைச் சுற்றி வருகின்றன. இவை மிகப் பெரிய பாறைகளால் ஆனவை. இந்த மீச்சிறு கோள் பட்டை (Asteroid Belt) சூரியக்குடும்பத்தில் உள்ள கோள்களை இரண்டு குழுக்களாகப் பிரிக்கிறது. புதன், வெள்ளி, பூமி மற்றும் செவ்வாய் ஆகிய கோள்கள் சூரியனுக்கும் இந்த மீச்சிறு கோள் பட்டைக்கும் இடையில் உள்ளன. இவை நான்கும் உட்கோள்கள் என அழைக்கப்படுகின்றன. மீச்சிறு கோள் பட்டைக்கு வெளியிலுள்ள வியாழன், சனி, யுரேனஸ், நெப்டியூன் ஆகிய மற்ற நான்கு கோள்களும் வெளிக்கோள்கள் எனப்படுகின்றன.

**கல்விக்கதிர்**

- அகரன் -

# அறிவியல் விந்தை

**ப்ளூட்டோ**

2006 ஆம் ஆண்டு பன்னாட்டு வானியல் அமைப்பு (International Astronomical Union), ப்ளூட்டோ ஒரு கோள் அல்ல என அறிவித்தது. அந்த ஆண்டு முதல் சூரியனைச் சுற்றும் கோள்களின் எண்ணிக்கை ஒன்பதிலிருந்து, எட்டானது.

**யுரேனஸ்**

யுரேனஸ் கோளின் சுழற்சி மற்ற கோள்களைப் போல் அதன் அச்சைப் பொறுத்து இருப்பதில்லை. மாறாக, அது ஒரு பந்தை உருட்டிவிட்டதுபோல் உருண்டு கொண்டே சூரியனைச் சுற்றி வருகிறது.

**மனிதனின் இதயம்**

மனிதனின் இதயம் சரசரியாக ஒரு நாளைக்கு ஒரு லட்சம் (1,00,000) முறைகளுக்கு மேல் துடிக்கிறது. உதாரணமாக, 60 வயதைக் கடந்த மனிதனின் இதயம் அதுவரை 60 ஆண்டுகளில் மொத்தம் 200 கோடி முறைகளுக்கு மேல் துடித்து இருக்கும்.

அப்படியென்றால், 100 வயது உடைய மனிதனின் இதயம் மொத்தம் சராசரியாக 350 கோடி முறைகளுக்கு மேல் துடித்து இருக்கும்.

**சூரிய ஒளி**

சூரியனுக்கும் பூமிக்கும் இடையேயுள்ள தூரம் 14.959787 கோடி கி.மீ. அதாவது, 14,95,97,870 கி.மீ (149.959787 மில்லியன் கி.மீ.).

இந்த தூரத்தை சூரியனின் ஒளி, நொடிக்கு 3 லட்சம் கி.மீ என்ற வேகத்தில் பூமியை வந்தடைய எடுத்துக் கொள்ளும் கால அளவு, 8 நிமிடங்கள் மற்றும் 20 நொடிகள் (அதாவது, 500 நொடிகள்)


**நன்னீர் (Freshwater)**

பூமியில் உள்ள நீரில் 97.4% கடல் நீராக அதாவது உப்பு நீராக உள்ளது. மீதமுள்ள 3% க்கும் குறைவான நீர் மட்டுமே நன்னீராக உள்ளது. அதிலும், 1.8% பனிப் பாறைகளாக உறைந்துள்ளது. இவை எல்லாம் போக, 0.78% நிலத்துக்கு அடியிலும், 0.02% குளங்கள், ஏரிகள், ஆறுகள் மற்றும் பிற நன்னீர் உள்ள நீர் நிலைகளாகவும் கிடைக்கிறது. இதன்மூலம், உலகில் நமக்கு கிடைக்கும் நன்னீரின் அளவு எந்த அளவுக்கு குறைவாக உள்ளது என்பதை நாம் அறியலாம்.

## இலக்கிய நயம்

– யாழ் மகள் சைந்தவி –

## கலைக் கதிர்



# காதல் சொன்ன கம்பன்

இராவணன் இல்லையேல் இராமனும் கூட சாதாரண சக்கரவர்த்தி மட்டுமே என்ற பதங்கள் என் மனதில் திடீரென உதிக்க, இது உண்மைதானா? என்ற கேள்வியும் கூட எனக்குள் எழுந்தது. அதனைப் பற்றி சிந்தித்துக் கொண்டிருக்கும் போதே கம்பராமாயணத்தை படித்துவிடலாமே என்ற எண்ணம், ஓர் ஆவல் தோன்றியது.

பல முறை வெவ்வேறு தருணங்களில் இராமாயணத்தை படித்தும், கேட்டும் அறிந்திருந்ததால், இம்முறை கம்பனின் மொழிநடையிலேயே அவன் சொல்லாட்சியிலேயே இராமாயணத்தை படிக்க வேண்டும் என்று என்னுள் எழுந்த ஆர்வம் தமிழ் இலக்கியங்களில் நான் கொண்ட காதலினால் உருவானது என்றும்கூட சொல்லிவிடலாம்.

விரித்தேன் கம்பன் எழுதிய நால்வரிக் காப்பியத்தை, வியந்தேன் அவன் சொல்லாட்சியில். இராமனா? இராவணனா? சிறந்தவன் யார்? என்ற தேடலில் இராம காவியத்தினை விரித்த எனக்கு அந்தக் கேள்வியே மறந்து போனது காரணம் கம்பன் என்னை ஏமாற்றி விட்டான்.

ஆம், நான் தேடிவந்த கேள்வியை மறக்கச் செய்து விட்டான்.

கல்வியில் பெரியன் கம்பன், கம்பன்வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும் என்ற வார்த்தைகளின் உண்மைகளை அப்போதே அறிந்துகொண்டேன்.

கம்பனின் சொல்லாட்சி, கவிச்சிறப்பு, அவன் தான் சொல்ல வந்ததை விளக்க கையாண்ட உவமைகள், அணிகள் அத்தனையும் கண்டு தமிழுக்கு ஓர் கம்பன் கிடைத்ததால்தான் கவிகள் இன்றும் வாழ்கின்றனவோ..! என்று எனக்குள் தானே கம்பனை வணங்கிக் கொண்டேன், ஒருமுறை மானசீகமாக.

முதல் முறை கம்பனின் கவிகளைப் படிக்கும் போது அதனை நயக்கத் தோன்றியது. மறு முறையும் அதனை மீட்டுகையில் கம்பனின் சொல்லாட்சி, கவித்துவம், கவி ஆளுமை, சந்தம், அணிகள் போன்றனவற்றில் ஆழ்ந்து இலக்கியத்தை வியக்கத்தூண்டியது.

சற்றே அத்தமிழில் மூழ்கிவிட்டு மீண்டும் அதனையே படிக்கையில் உயர்ந்த பொருள், தத்துவங்கள் உள்ளே பொதிந்திருப்பதனை புரியச் செய்தது. இதனை நான் சொல்வதனையும் விட கம்பகாப்புகளை படித்துப் பார்த்தால் உங்களுக்கே தெளியும் நான் ஒன்றும் பீடிகைப் போடவில்லையென்பது.

ஒரு படைப்பாளி தான் வாழ்ந்த காலத்தில் மட்டுமல்லாது, அவன் வீழ்ந்த பின்னரும் கூட அவனது படைப்புகள் அவன் புகழைப் பாடுமானால் அவனே உண்மையான படைப்பாளி. அந்த வகையில் கம்பன் தன் கவிச்சிறப்பால் இன்றும் வாழ்வது மட்டுமல்லாமல், அவன் தமிழ் மீது, கவி மீது கொண்ட காதலினால் பல கவிஞர்களை உயிர்த்தெழ வழி சமைத்துள்ளான்.

கம்பனின் கவி ஆளுமையில், அவன் காப்புகளில் கவிச் சிறப்புகளை நான் நயந்து கொண்டிருக்கும் போது, கவியரசு கண்ணதாசன்.

காலமெனும் ஆழியிலும், காற்றுமழை ஊழியிலும் சாகாது கம்பனவன் பாட்டு, அது தலைமுறைக்கு அவன் எழுதி வைத்த சீட்டு எனக் கம்பன் புகழை மெச்சிப் பாடியதும் என்னுள் ஒரு கீற்றாக ஒரு கணம் வந்து விட்டுப் போனது.

கம்பன் தனது படைப்பில் கையாண்ட உவமைகளை பார்க்கும் போது, கம்பன் எப்படி இப்படிச் சிந்தித்தான்? ஒன்றை ஒன்றிக்கு உவமைப்படுத்த வேண்டுமென்றால், ஒப்பிடுவதைப் பற்றியும் நன்கறிந்திருக்க வேண்டும்.

அப்படியென்றால் உலகத்தில் உள்ள அனைத்தையும் பற்றி கம்பன் அறிந்து வைத்துக் கொண்டே தன் காப்புகளை வடித்தானா? என்ற எண்ணம், கேள்வி எனக்கு மட்டுமல்ல, அவன் கவிகளை படிப்பவர்களுக்கு இயல்பாகவே ஏற்படுவதில் வியப்பேதுமில்லை.

கம்பன் கவிகளை எழுதுவதற்கு முன்னர் அதனை ரசிக்கின்றான், அவன் ரசித்ததை தான் மட்டும் அனுபவித்து அதனுள் கரைந்து விடாமல், படிக்கும் வாசகனையும் தன் கவிகளின் உள்ளே இழுத்துச் சென்று தன் வார்த்தைகளில் அழுத்தத்திலும், அதன் ஓசை நயத்திலும் மூழ்கடிக்கச் செய்துள்ளான் இது அசாத்தியமானதோர் ஆற்றல்.

இராம காப்பியத்தில் ஓர் தனித்துவம் உண்டு. அதாவது கம்பன் தன் கதைக்குள் கொண்டு வரும் பாத்திரங்களை வர்ணிப்பது. இராமனின் மகத்துவத்தைக் கூறும் கம்பன் அதற்கு சற்றும் குறைவில்லாத வகையில் இராவணனையும் வர்ணிக்கின்றான்.

இராமனை கண்டு வியந்து நிற்கும் போது அப்படியே சென்று இராவணனின் கம்பீரத்தையும், வீரத்தையும் கூறும் போது கம்பன் வாசகனை வியப்பின் உச்சத்திற்கே கொண்டு செல்கின்றார். கதாபாத்திரங்களின் இயல்புகளுக்கு ஏற்றவாறு அந்தந்த பாத்திரங்களை எடுத்துக் கூறுவதில் கம்பனுக்கு நிகர் அவன் மட்டும் என்றே தோன்றியது.

உதாரணமாக நான் வியந்த ஓர் கட்டத்தினைக் கூறுகின்றேன்.

இராமனையும், தம்பி இலட்சுமணரையும் விசுவாமித்திர முனி தன்னுடைய வேள்வியைக் காக்க கானகம் அழைத்துக் கொண்டு செல்கின்றார். இந்த கதை கானகத்தில் நகர்ந்து கொண்டு செல்லும் போது தாடகை எனும் ஓர் அரக்கியின் பாத்திரம் உள்ளே பிரவேசிக்கின்றது. அவளை கம்பர் இவ்விதமாக என் கண் முன்னே கொண்டு வந்து நிறுத்துகின்றார்.

**இறைக்கடை துடித்த புருவங்கள் – எயிறு என்னும்**
**பிறைக்கிடை பிறக்கிட மடித்த பிலவாயள்**
**மறக்கடை அரக்கி – வடவைக்கனல் இரண்டாய்**
**விறைக்கடல் முளைத்தென வெருப்பு எழ விழித்தாள்**

கம்பனின் இவ்வரிகள் எத்தனை அழகாக ஓர் அரக்கியை காட்டுகின்றது அடடா.. கம்பன் கவியுலகில் ஜாம்பவான் தான் என்றுமே. கடும் கோபம் காரணமாக நெறித்த புருவங்கள்.., கோரமான பற்கள் தெரிய, இரு கண்களும் தீ என எரிய, ஏழுலகமும் கேட்டு அதிரும் படி கர்ச்சினை செய்கின்றாள் இராமனை கண்ட அரக்கி. இங்கு ஓர் சிறிய பாத்திரமாக கதைக்குள் வரும் தடாகையைக் கூட கம்பன் இவ்விதமாக கூறுவது வியப்பினை ஏற்படுத்துகின்றது அல்லவா. ஒவ்வோர் பாத்திரத்தினையும் வாசகனின் கண் முன்னே நிறுத்த வேண்டும் என்ற கம்பனின் நோக்கத்ததையும், அவன் கவியாற்றலையும் கூட இக்கட்டம் வெளிப்படுத்துகின்றது.கம்பன் இங்கு தாடகைக்கு இத்தனை முக்கியத்துவம் கொடுக்கக் காரணம் உண்டு என்பதும் தொடர்ந்து படித்தபோதே தெளிவானது.

இராமன் ஓர் தெய்வீகப் பிறவி, தன்னிகரற்ற தலைவன் அவன் மோதும் ஓர் அரக்கியை சாதாரணமானவளாக வர்ணித்து விட முடியுமா? இப்படிப்பட்ட அரக்கியை நோக்கி இராமன் விட்ட பாணம் சொல்லொக்கும் கடிய வேகச்சுடுசரம் எனச் சென்று தாடகையை தாக்குவதாக கம்பன் கூறுகின்றான்.

உதிர்க்கப்படும் சொல்லுச்சொல் எத்தனை வேகம் உண்டோ அத்தனை வேகமாக பயணித்த இராமனின் அம்பு கல் ஒக்கும் அவள் நெஞ்சில் புகுந்து புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருள் போல துழைத்து வெளி வந்ததாக கம்பன் விபரிக்கின்றான்.

வலிமை படைத்த அரக்கியின் நெஞ்சை, சொற்கள் உதிரும் வேகத்தொடு சென்று தாக்கிய இராமனின் அம்பு. தீயவர்களின் காதில் நல்லோர் ஓதும் சொற்களைப் போல் இலகுவாக வெளிவந்தது என்று கூறும் கம்பனின் கவி நயத்தில் நான் அக்கணம் சிலிர்த்தே போனேன்.

இவ்விதமாக எங்குமே சலிப்பை ஏற்படுத்தாது காவியத்தின் உள்ளே ஓர் பாத்திரமாக என்னையும் அழைத்துக் கொண்டு பயணித்த கம்பனை என்னென்று நான் புகழ.

இக்கணம் ஒன்று நினைவுக்கு வருகின்றது. பெருமாளின் அழகை வர்ணித்து பாடிய ஆழ்வார் ஓர் கட்டத்தில் அதற்கு மேலே பெருமாளின் அழகை வர்ணிக்க வார்த்தைகள் இல்லாமல் ஐயோ என்சொல்லி அவனழகை வர்ணிப்பேன் என்று வியந்தே நின்று விட்டாராம். அத போல கம்பனின் கவிச்சிறப்பை அவன் கையாண்ட கவி நுணுக்கங்களை கண்டு வியக்க மட்டுமே முடிந்த எனக்கு அதனை வர்ணிக்க எடுத்துக் கூற தெரியவில்லை.

முழு உலகத்தினையும் இரு வரிக்குள் அடக்கலாம் என்ற உண்மையை வெளிப்படுத்தியவன் வள்ளுவன். காவியத்திற்குள் கற்பனையை உலாவவிட்டு இசையோடு கூடிய நாடகத்தினையும் இணைத்து ஒப்பற்ற காவியத்தை படைத்தான் இளங்கோ.

இந்த இருவரிலும் முற்றாக வேறுபட்டு இலக்கிய உலகில் உள்ள நுணுக்கங்கள் அனைத்தையும் நால் வரிக் கவியில் உள்ளடக்கி இப்படியும் எழுதலாம். என்ற உண்மையை உணரவைத்து தான் பெற்ற கவியின்பம், இலக்கிய இன்பம் வையகமும் பெற வேண்டும் என்று பல நூறு வருடங்களுக்கும் மேலாக இலக்கிய உலகில் வாழ்த்த ஒருவன் இன்று உயரத்தின் தாரகையாக ஜொலிக்கின்றான்.இன்றும் ஓர் முரண்பட்ட கருத்து உண்டு அதாவது கம்பன் என்ன சொந்தமாகவா காவியம் படைத்தான் வால்மீகி எழுதியதை அப்படியே மொழி பெயர்த்தான். இதில் எப்படி அவனை சிறப்பாக



எடுத்துக் கொள்ள முடியும் என்பதே அது.

அனால் கம்பன் எழுதிய கவிக் காப்பியத்தை படிக்கும் போது பல இடங்களில் வால்மீகியையும் விஞ்சி விடுகின்றான். வால்மீகியின் கதையில் இருந்து முற்றிலும் வேறுபட்டது கம்ப காப்பியம் என்பதே உண்மை.

கம்பனவன் கவிகளின் ஊடாக ஓர் தீர்க்கதரிசியாக உருவெடுக்கின்றான். இயல்பு வாழ்வினை அழகாக படம் பிடிக்கின்றான். தத்துவம் கலந்த கவிபுகுத்தி சித்தாந்தங்களையும் விவரித்து அறம், பொருள், இன்பம், வீடு என அனைத்தையும் தெளிவாக காட்டுவதால் தான் அவன் இன்றும் சிகரத்தின் உச்சத்தில் உள்ள ஓர் உலக மகாகவியாக வாழ்கின்றான் என்ற வாதத்தினை எவராலும் மறுக்க முடியாது என்பது என்கருத்து.

இந்தப் பிரபஞ்சத்தை நாம் அண்ணார்ந்து பார்க்கையில் கோடிக்கணக்கான நட்சத்திரங்கள் அழகை வாரி இறைக்கும், ஆனாலும் எம் உலகில் மானிடக் கண்களுக்கு ஆதவனும், நிலவும் தனியோர் அழகு. அவ்வகையாக கம்பனும் இலக்கிய தமிழ் உலகில் தனித்துவத்தை பெற்ற ஓர் படைப்பாளி என்பதனை அவன் படைத்த காப்புகளை படிப்பவர்களுக்கு நிதர்சனமாகும்.

இராமனின் தெய்வீகமும், இலக்குவனின் அன்பும், சகோதரங்களின் பாசமும், அன்னைகளின் நேசமும், பெண்மையின் உயர்வும், சீதையின் கற்பும், வாலியின் வீரமும், அனுமனின் பக்தியும், இராவணின் ஒழுக்கமும், சூர்ப்பநகையில் நயவஞ்சகமும், மாயனின் மாயாஞாலங்களும், தசரதனின்ஆட்சியும் என ஒவ்வோர் பாத்திரத்தையும் தனிப்பண்போடு உலகிற்கான எடுத்துக்காட்டாய் எடுத்தியம்பிய கம்பனின் சிறப்பு தனிச்சிறப்பு. இராவணனின் மரணத்தைக் கூறும் கம்பன்.., காமத்தின் வினையால் தலைசிறந்த ஓர் தலைவன் இறுதியில் சேற்றில் வீழ்ந்து இராம பாணம் உடலை சல்லடையாக துழைத்து உயிர் துறந்ததை எண்ணும் மண்டோதரியின் சோகத்தினை விளக்குகையில்,

**வெள்ளெருக்கஞ் சடைமுடியான் வெற்பெடுத்த – திருமேனி மேலும் கீழும்**
**எள்ளிருக்கும் இடன் இன்றி உயிர் இருக்கும் இடம்நாடி இழைத்தவாறோ**
**கள்ளிருக்கும் மலர் கூந்தல் சானகியை மனச்சிறையில் கரந்த காதல்**
**உள்ளிருக்கும் எனக்கருதி உடல் புகுந்து தடவியதோ ஒருவன் வாளி என கவி வடிக்கின்றார்.**

இங்கு இராவணனின் கம்பீரத்தையும், சீதையின் அழகையும் கூட கூறும் கம்பன், சீதையின் மீது இராவணன் கொண்ட காமம் எனும் போதை இராவணனின் உடலில் எங்கேனும் உண்டா என சல்லடையாக இராமனின் பாணம் தேடிவிட்டது என அழுத மண்டோதரி அத்தோடு தன்னுயிரையும் நீக்கிக் கொண்டு விட்டாள். இதனூடாக கம்பன் எத்துணை பெரிய உலக நியதியையும் கூட கவிக்குள் அடக்கிவிட்டான். அது மட்டுமா ஒரே கவியில் சோகம், அழகு, வீரம், காமத்தின் கொடுமை, பெண்ணியம் அனைத்தையும் ஒருசேர காட்டும் கம்பனின் கவிச்சிறப்பை என்னென்று நான் வியக்க.

நிற்க.., கம்பனின் கவிப்புலமையை நான் பாடியது போகட்டும் வாசகனாக அதில் கலந்து நீங்களும் ஒரு முறை படித்துப் பாருங்கள் ஓர் மாய உலகிற்கு இலக்கிய ஏணியில் ஏற்றி கம்பன் அழைத்துச் செல்வான் என்பது உண்மை.

கம்பனைப் போல், வள்ளுவனைப் போல், இளங்கோவைப்போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை பாரதி சொல்லிய இந்த வரிகளை மீண்டும் ஒரு கணம் சிந்தித்துப் பார்த்து விட்டு கம்பனின் கவிச்சிறப்பில் நுழைந்துவிட்டேன் நான் மீண்டும்.

# தமிழ் கூறும் நல்லுலகு என்றுமே மறக்க முடியாத ஒரு வழிகாட்டி தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள்

## இன்றைய இளம் சமுதாயத்தினருக்கு அவர் பணியை உணர்த்துவோம் – 01

- கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை அடிகள் -
(ஊடக வருகை விரிவுரையாளர் - இலங்கை திறந்த பல்கலைக்கழகம்; ஓய்வு நிலை ஊடக வருகை விரிவுரையாளர் - யாழ் பல்கலைக்கழகம் இயக்குநர் - பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர்)

'என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ்செய்யுமாறே' என்ற திருமூலரின் வார்த்தைகளைத் தன்னுடைய வாழ்வின் விருதுவாக் காக்கி தமிழையும் சமயத்தையும் தன் இரு கண்களாக்கி பணியாற்றியவர் தனிநாயகம் அடிகள்.

இந்த பன்முக ஆளுமைகொண்ட இந்த மாமனித னின் வாழ்வும் பணியும் பலகோணங்களில் தமிழ்கூறும் நல்லுலகெங்கும் மட்டுமல்ல தமிழர்வாழும்பூமி எங்கும் பன்முகப்பார்வை கொண்டு பார்க்கப்படுவதும் படிக்கப் படுவதும் ஆய்வு செய்யப்படுவதும் சிறப்பானதாகும்.

இது இன்றைய இளம் சமுதாயத்தினருக்கு, தமிழ்த் தூது தனிநாயகம் அடிகளாரை அறிமுகப்படுத்தவும் - சாதனைகள் படைக்க முனையும் துறைசார் வல்லுனர்கள், இவரைத் தம் மேல்வரிச்சட்டமாக்கி அவர்போல தாமும் பணியாற்றவும் - பங்களிப்புச்செய்து தமிழையும் சம யத்தையும் வளப்படுத்தவும் பெரும் துணைபுரியும்.

ஊடகத்துறையானது இன்று அனைத்துப் பணிக ளுக்கும் அடிப்படையாய் அமைந்துவிட்டது.



இன்று துறைசார் வல்லுனர்களும் கல்விமான்களும் ஊடகத்தைத் தமது பணிக்கும் பணி வளர்ச்சிக்கும் பயன் படுத்துகிறார்கள். ஆனால் மிக நீண்ட காலத்திற்கு முன் னரே தனிநாயகம் அடிகள் இந்த யுக்தியை முழுமையா கப் பயன்படுத்தி வெற்றி கண்டுள்ளார் என்பது வியப்புக் குரிய ஒன்றாகும்.

இக்கட்டுரையானது தனிநாயகம் அடிகளுடைய பத்தி ரிகைப் பணியை ஆய்வு செய்து அவர் தம் தமிழ்த்தூதுப் பணிக்கு பத்திரிகைத்துறையை எவ்வாறு பயன்படுத்தி னார் என்பதை நோக்க விழைகிறது.

தனிநாயகம் அடிகளுடைய பத்திரிகையியல் பணியை ஆய்வுசெய்வதற்கு அவருடைய வாழ்வு பரந்து நகர்ந்த விதத்தை அறிந்துகொள்வது அவசியமானதாகும். ஏனென்றால் அவருடைய பணிவாழ்வு ஓரிடத்தில் நிலைத்து நின்ற ஒன்றல்ல. மாறாக பலநாடுகளை இணைத்து நகர்ந்து சென்ற ஒன்று. குறிப்பாக இலங்கை, இந்தியா, மலேசியா என்ற மூன்று நாடுகளையும் மையப்படுத்தி பல நாடுகளுக்கும் மாறிமாறிச் சென்ற ஒன்று. தாம் சென்ற இடங்களெல்லாம் தம்முடைய தமிழ்ப் பணிக்கு ஏற்றவிதமாக ஆங்காங்கு பத்திரிகைப் பணியை இவர் ஆற்றியுள்ளார்.

### தனிநாயகம் அடிகளுடைய வாழ்வு - வாழ்வின் முதல் கட்டம்

இலங்கையின் வடபகுதியான தீவுப்பகுதியில் கரம்பொன் ஊரில் 1913இல் இந்து சமயப் பின்னணியில் பிறத்தல்; 1923 - 1930 ஆண்டுகாலப்பகுதியில் சேவியர் ஸ்ரனிஸ்லோஸ் என்ற பெயருடன் புனித பத்திரிசியார் கல்லூரியில் கேம்பிறிச் தேர்வுவரை கல்வி கற்றல்; குரு வாகும் எண்ணத்துடன் 1931 - 1934 ஆண்டுகாலப் பகுதியில் பொரளை புனித பேர்ணாட் குருத்துவக் கல்லூரி யில் மெய்யியல் கற்றல்; குருத்துவக் கல்லூரியிலிருந்து விலகித் தாம் கல்வி கற்ற புனித பத்திரிசியார் கல்லூரி யில் ஆசிரியப் பணி புரிந்தல் - இவை, இவரின் வாழ்வின் முதல்கட்டமாகும்.

### தனிநாயகம் அடிகளுடைய வாழ்வு - வாழ்வின் இரண்டாம் கட்டம்

திருவானந்தபுரம் மறைமாவட்ட பேராயர் மார் இவனியோஸ் ஆண்டகையின் அழைப்பின்பேரில் திருவானந்தபுரம் மறைமாவட்டத்தில் இணைதல் 1935 - 1938 ஆண்டு காலப்பகுதியில் உரோமையில் இறை யியல் கற்றல் 1938இல் குருவாதல் 1939இல் திரு வானந்தபுரம் மறைமாவட்ட புனித ஞானப்பிரகாசர் சிறிய குருமடத்தில் ஆசிரியப்பணியாற்றல் தொடர்ந்தும் மேற்கல்வி கற்க சந்தர்ப்பம் வழங்கப்படாமையால் திருவானந்தபுரம் மறைமாவட்டத்திலிருந்து தூத்துக்குடி மறை மாவட்டத்தில் இணைதல் 1940 - 1945 ஆண்டு காலப்பகுதியில் ஆயர் பிரான்ஸிஸ் திபூசியஸ் றோச் ஆண்டகையின் பணிப்பின்பேரில் வடக்கன்குளம் புனித திரேசம்மாள் உயர்நிலைப்பள்ளியில் துணைத் தலைமை ஆசிரியர் பணியாற்றல் 1945 - 1947 காலப் பகுதியில் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தில் தமிழில் முதுகலைமாணிப்பட்டம் பெறல் 1947 - 1949 ஆண்டு காலப்பகுதியில் பேராசிரியர் அ. சிதம்பரநா தன் செட்டியாரின் வழிகாட்டலில் பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை - **Nature in Ancient Tamil poetry** என்னும் தலைப்பில் இலக்கிய முதுகலைமாணிப் பட்டம் பெறல் 1948 ஆம் ஆண்டு தூத்துக்குடியில் தமிழ் இலக்கியக் கழகத்தை தோற்றுவித்தல்; 1949 - 1950 காலப்பகுதி யில் சீனா,ஜப்பான், அமெரிக்கா நாடுகளில் தமிழரின் கலை,இலக்கியம், பண்பாடு, வரலாறு என்பவற்றைப் பற்றி சொற்பொழிவாற்றல் - இவை, இவரின் வாழ்வில் இரண்டாம் கட்டமாகும்.

### தனிநாயகம் அடிகளுடைய வாழ்வு - வாழ்வின் மூன்றாம் கட்டம்

1952 - 1961 காலப்பகுதியில் இலங்கைப. பல்கலைக் கழகத்தில் கல்வித்துறை விரிவுரையாளர் பணி; தமிழர் பண்பாட்டுக் கழகத்தை நிறுவல் 'தமிழ் கல்சர்' Tamil Cunlture என்ற ஆங்கில இதழ் வெளியிடல் 1955 - 1957 ஆண்டு காலப்பகுதியில் இலங்கைப் பல்கலைக்கழகத் திலிருந்து மாற்றலாகி காலாநிதிப்பட்டம் பெறல் 1956 - 1961 ஆண்டுகாலப்பகுதியில் நடைபெற்ற சிங்கள மொழிச் சட்டத்தை எதிர்த்துத் தமிழ் மக்களின் அகிம்சைப் போராட்டங்களில் இணைதல் இதனால் அரசோடு முரண்படல் தமிழ்மொழி உரிமை பற்றிய தனிநாயகம் அடிகளாரின் சொற்பொழிவுகள் அரசால் கூர்ந்து அவதா னிக்கப்படல் இதனால் 1961 - 1969 ஆண்டுகாலப் பகுதி யில் மலேசியஓ பல்கலைக்கழகத்தில் இந்திய மொழி கள் துறையின் தலைவர் பணியேற்றல் - இவை , இவரின் வாழ்வின் மூன்றாம் கட்டமாகும்.

### தனிநாயகம் அடிகளுடைய வாழ்வு - வாழ்வின் நான்காம் கட்டம்

1964இல் உலகத் தமிழாராய்ச்சி மன்றம்; **International Association of Tamil Research** என்ற அமைப்பை சென்னை மாநில தமிழ் வெளியீட்டுக்கழகத்தின் துணை யுடன் புதுடில்லியில் தொடங்கல் இந்த அமைப்பின் மூலம் உலகத் தமிழ் மகாநாடுகளை மூன்று ஆண்டுக ளுக்கு ஒருமுறை நடத்த திட்டமிடல் 1966ஆம் ஆண்டு முதல் உலகத் தமிழ் மாகாநாட்டை மலேசியாவில் ஒழுங்குசெய்தல் 1969இல் மலேசியப் பல்கலைக்கழகத் திலிருந்து விலகி இலங்கை திரும்பல் 1972 வரை கண்டி யில் தங்கி ஆசிய, அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளுக்கு வருகைநிலைப் பேராசிரியராக சென்றுவரல் யாழ் மறை மாவட்ட வளலாய் என்னும் இடத்தில் உள்ள விடுமுறை இல்லத்தில் 1979ஆம் ஆண்டுவரை தங்கியிருந்தல் பின்னர் பண்டத்தரிப்பு தியான இல்லத்தில் தங்கியிருத் தல் 1980ஆம் ஆண்டு இவ்வுலக வாழ்வை முடித்துக் கொள்ளல் - இவை இவரின் வாழ்வின் நான்காம் கட்ட மாகும்.

தனிநாயகம் அடிகளாரின் பத்திரிகைப்பணியை நான்கு பெரும் பிரிவுகளுக்குட்படுத்தலாம்.

ஒன்று - தனிநாயகம் அடிகளார் தாமே ஆசிரியராக இருந்து ஆற்றிய பத்திரிகைப் பணி.

இரண்டாவது - வெளிவந்துகொண்டிருந்த பத்தி ரிகைகள், சஞ்சிகைகளில் இவர் ஆற்றிய பத்திரிகைப் பணி.

மூன்றாவது - தமக்குத் தெரிந்தவர்களையும் நண் பர்களையும் - அவர்கள் உள்நாட்டவர் என்றாலும் வெளி நாட்டவர் என்றாலும் - தம்முடைய சஞ்சிகைகள், பத்தி ரிகைகளிலும் எழுதி பத்திரிகைப்பணி ஆற்றும்படி ஊக் குவித்த பணி.

நான்காவது - மறைந்த அறிஞர்கள் மற்றும் தம் காலத்து அறிஞர்களின் மிகச்சிறந்த நூல்கள் மற்றும் அச்சேறாத நூல்கள், ஆய்வேடுகளிலிருந்து கட்டுரை களை எடுத்து தம் இதழ்களில் வெளியிட்ட பத்திரிகைப் பணி.

தனிநாயகம் அடிகளாரின் பத்திரிகைப்பணி பற்றி ஆய்வு செய்யும் போது இங்கு தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டிய முக்கிய விடயம் என்னவென்றால் இந்த நான்கு நிலைகளிலும் பத்திரிகைப்பணி வழி தமிழை வளர்ப்பதும், தமிழ்ப்பணி ஆற்றுவதுமே தனிநாயகம் அடிகளாரின் ஒரே நோக்கமாக இருந்தது என்பதாகும். இதற்கு ஒருபடி மேலேசென்று சொல்வதானால் அவர் ஆற்றிய பணி அனைத்தும் தமிழ்மொழிக்கு அணி சேர்ப்பனவாகவே அமைந்திருந்தன. இந்த பணிக்கு பத்திரிகைப்பணியை ஒரு கருவியாகப்பயன் படுத்தி னார்.

உலகம் சுற்றிவலம் வந்து பல நாடுகளில் ஆற்றிய சொற்பொழிவுகள் - ஏற்படுத்திய உலகத்தமிழாராய்ச்சி மன்றம் மற்றும் உலகத்தமிழ் மகாநாடுகள் - நிறுவிய தமிழ் இலக்கியக்கழகம் மற்றும் தமிழர் பண்பாட்டுக் கழகம் (தூத்துக்குடி - கொழும்பு), தமிழ்க்கலை மன்றம் (சென்னை) என்பவறிக்கெல்லாம் அடிப்படையாக பத்தி ரிகைப்பணி அமைந்திருந்தது. **Tamil Culture** காலாண்டு இதழ் - **Journal of Tamil Studies** என்பன இங்கு முக்கியம் பெறும் இதழ்களாகும்.

தனிநாயகம் அடிகளார் தமிழ்ப்பணிக்கு பத்திரிகைத் துறையை முழுமையாகப் பயன்படுத்தினார். தேன் மதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவச்செய்ய வேண்டும் என்பதே அவரின் நோக்கமாக இருந்தது. இப்பணியை முழுமையாக ஆற்றியதாலேயே தனிநாய கம் அடிகளார் - தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளானார். இவருக்கு ஒப்பாரும் மிக்காரும் இனித்தோன்ற முடியாது - தனிநாயகம் அடிகளாரின் வாழ்வையும் பணியை யும் முழுமையாக அறிந்தவர்கள் இதனை ஒப்புக்கொள்ள வர். தமிழ்மொழியானது புலம்பெயர் தமிழர்களால் தமிழர் இல்லாத நாடில்லை என்ற ஒருநிலைக்கு வந்தா லும் தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரின. பணியை ஆற்ற இன்றைய நவீன வசதியான சூழலிலும் ஒரு தேவையுண்டு என்பதே உண்மையாகும்.

(தொடரும்...)




காலைக்கதிர் Kalaikkathir
கிறிஸ்தவ செய்தி இதழ்
கிறிஸ்தவ செய்தி

காலைக்கதிர் Kalaikkathir

# நான்காவது தொழில் புரட்சியை இந்திய தேசம் வழிநடத்துகிறது

## பிரதமர் மோடி பெருமிதத்துடன் உரை மத்திய - மாநில அறிவியல் மாநாட்டில்



நமது நாட்டின் விஞ்ஞானிகளின் சாதனைகளை நாம் மிகுந்த உற்சாகத்துடன் கொண்டாடுவோம் என பிரதமர் மோடி கூறினார்.

மத்திய – மாநில அறிவியல் மாநாட்டை பிரதமர் நரேந்திர மோடி டெல்லியில் இருந்து காணொலி மூலம் தொடங்கி வைத்தார்.

2 ஆம் நாளான நேற்று, நாட்டில் புதிய கண்டுபிடிப்பு மற்றும் தொழில்முனைவோருக்கு வசதி செய்து கொடுக்க ஏதுவாக அறிவியல் மாநாடு நடைபெற்றது. குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் நடைபெறும் மாநாட்டில் சுகாதாரம், தண்ணீர் உள்ளிட்ட மையப் பொருள்களில் அமர்வுகள் நடக்கின்றன.

பின்னர், மாநாட்டில் பிரதமர் மோடி உரையாற்றிய போது கூறியவை வருமாறு:–

மத்திய – மாநில அறிவியல் மாநாடு 'சப்கா பிரயாஸ்' (அனைவரின் முயற்சி) என்ற நமது மந்திரத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு.

இன்று, இந்தியா நான்காவது தொழில் புரட்சியை வழிநடத்திச் செல்லும் நிலையில், இந்தியாவின் அறிவியல் மற்றும் இந்தத் துறையுடன் தொடர்புடைய மக்களின் பங்கும் மிக முக்கியமானது. நமது விஞ்ஞானிகளின் சாதனைகளை நாம் கொண்டாட வேண்டும். விஞ்ஞானிகளையும் அவர்களின் கண்டுபிடிப்புகளையும் நாம் கொண்டாடும் போது, அறிவியல் நமது கலாச்சாரத்தின் ஒரு பகுதியாக மாறும். அறிவியல் அடிப்படையிலான வளர்ச்சியின் தொலைநோக்கு பார்வையுடன் நம் அரசு முன்னேறி வருகிறது.

2014இல் இருந்து அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் முதலீடு அதிகரித்துள்ளது. அரசாங்கத்தின் முயற்சியால், 2015 இல் 81 ஆவது இடத்தில் இருந்த இந்தியா, உலகளாவிய கண்டுபிடிப்பு குறியீட்டில், தற்போது 46 ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. இன்றைய இளைஞர்கள் தொழில்நுட்பத்திற்கு விரைவாக தங்களை மாற்றியமைத்து வருகின்றனர். அவர்களை முழு பலத்துடன் ஆதரிக்க வேண்டும். இந்த 'அமிர்த காலில்' இந்தியாவை உலகளாவிய ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்பு மையமாக மாற்ற வேண்டும். மற்ற மாநிலங்களில் இருந்து சிறந்த நடைமுறைகளை பிற மாநிலங்கள் பின்பற்ற வேண்டும். நாட்டில் அறிவியல் சார்ந்த வளர்ச்சித் திட்டங்களை சரியான நேரத்தில் மற்றும் திறம்பட செயல்படுத்துவதை உறுதி செய்வதற்கான ஒரு படியாக இது இருக்கும். – இவ்வாறு அவர் கூறினார்.

## புதிய தொழில் முயற்சியாளர்களின் உருவாக்கத்தில் குஜராத் முன்னிலை






புதிய தொழில் முயற்சியாளர்கள் என்ற 'ஸ்டார்ட் அப்' தரவரிசையில் குஜராத் 3 ஆண்டுகளாக முதல் இடம் வகிக்கிறது என்று முதலமைச்சர் பூபேந்திர பட்டேல் கூறியுள்ளார்.

நாடு முழுவதும் உள்ள அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சர்கள் மற்றும் செயலாளர்கள் பங்கேற்க கூடிய இரண்டு நாள் மாநாடு ஆமதாபாத் நகரில் உள்ள அறிவியல் நகரில் நேற்றும் இன்றும் நடைபெறுகிறது.

மத்திய மற்றும் மாநில அறிவியல் மாநாட்டைப் பிரதமர் மோடி காணொலிக் காட்சி மூலம் நேற்றுத் கலந்து கொண்டு தொடங்கி வைத்து உள்ளார். நாட்டில் புதிய கண்டுபிடிப்பு மற்றும் தொழில்முனைவோருக்கு வசதி செய்து கொடுக்கும் முயற்சியில் முதல் முறையாக இத்தகைய மாநாடு நடைபெறுகிறது.

இந்த வகையில், முதலாம் மாநாட்டில் குஜராத் முதலமைச்சர், மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப துறை இணை மந்திரி, மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை மந்திரிகள், செயலாளர்கள், தொழில்துறை தலைவர்கள், தொழில் முனைவோர், அரசு சாரா அமைப்புகள், இளம் விஞ்ஞானிகள் மற்றும் மாணவர்கள் பங்கேற்கின்றனர். இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிய குஜராத் முதலமைச்சர் பூபேந்திர பட்டேல், மாநிலத்தில் அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்திற்கான சுற்றுக்சூழலை இளைஞர்களுக்காக மாநில அரசு உருவாக்கி வருகிறது. நம்முடைய இரட்டை என்ஜின் அரசில் வேலைவாய்ப்பு உருவாக்கம் மற்றும் புதுமையான கண்டுபிடிப்புகள் ஆகியவையும் ஊக்குவிக்கப் பட்டு வருகின்றன. கடந்த 3 ஆண்டுகளாக ஸ்டார்ட்அப் தரவரிசையில் குஜராத் முதல் இடம் வகிக்கிறது என்று – கூறினார்.

## சாதாரண சைக்கிளை 20 நிமிடத்தில் மின்சார சைக்கிளாக மாற்றும் 'கிட்'!

### ஹரியானா முயற்சியாளரின் சாதனை



சுற்றுச்சூழல் மாசுபாட்டைக் கட்டுப்படுத்தும் நோக்கத்தில் மின்சார வாகனப் பயன்பாட்டைப் பல நாடுகளும் ஊக்குவித்துக்கொண்டிருக்கின்றன. இந்தியாவிலும் மின்சார வாகனங்களைப் பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டிருக்கிறது. எனினும் அவற்றின் விலை அதிகமாக இருப்பதால் அனைத்து தரப்பினரும் வாங்க முடியாத நிலை இருக்கிறது.

சாமானிய மக்களும் மின்சார வாகனப் பயண அனுபவத்தை பெற வேண்டும் என்ற நோக்கத்தில் சாதாரண சைக்கிளை எலெக்ட்ரிக் சைக்கிளாக மாற்றும் பணியை முன்னெடுத்திருக்கிறார், குர்சவரப் சிங். சைக்கிளில் சுலபமாக பொருத்தும் வகையில் கையடக்க 'கிட்' ஒன்றை கண்டுபிடித்திருக்கிறார். பட்டரியில் இயங்கும் இது சைக்கிளை மின்சார வாகனமாக மாற்றக்கூடியது. இந்த சாதனத்தை எந்த வகையான சைக்கிளிலும் இணைக்கலாம். 20 நிமிடத்திலேயே அந்த சைக்கிள் மின்சார சைக்கிளாக மாறிவிடும்.

குர்சவுரப்பின் பூர்வீகம் ஹரியானா மாநிலத்திலுள்ள ஹிசார். தனது கிராமத்தில் நிலவிய பிரச்சினையே இந்த கிட்டை வடிவமைக்க தூண்டியது என்கிறார்.

"எனது கிராமத்தில் வசிக்கும் குழந்தைகள் நீண்ட தூரம் சென்றுதான் பள்ளிப் படிப்பை தொடர வேண்டியிருக்கிறது. தூரத்தை காரணம் காட்டி பல மாணவர்கள் பள்ளிக்கூடம் செல்ல மறுத்தனர். கொரோனா காலகட்டத்தில் கிராமத்தினர் அனைவருமே சிரமப்பட்டார்கள். எங்கு சென்றாலும் குறைந்தபட்சம் 4 கிலோ மீற்றர் தூரம் நடக்க வேண்டியிருந்தது. சைக்கிள்தான் பெரும்பாலானவர்களின் வாகனமாக இருக்கிறது.

"பின் தங்கிய கிராமமாக இருந்தாலும் எங்கள் கிராமத்தில் உள்ள ஒவ்வொரு வீட்டிலும் சோலார் பனல் உள்ளது. அதனால் அவர்களுக்கு சூரிய சக்தி மின்சாரம், மின்சார பட்டரி பற்றிய புரிதல் இருக்கிறது" – என்பவர் சைக்கிளை பட்டரியில் இயங்கும் மின்சார வாகனமாக மாற்றும் யோசனையை முன்வைத்திருக்கிறார். நீண்ட ஆய்வுக்கு பிறகு அதனை செயல்படுத்தியும் விட்டார். இந்த கிட்டை சைக்கிள் அல்லது ரிக்ஷாவுக்கு பயன்படுத்தலாம். இது மணிக்கு 25 கிலோ மீட்டர் வேகத்தில் செல்லும் திறன் கொண்டது. ஒருமுறை சார்ஜ் செய்தால் 40 கிலோ மீற்றர் தூரம் செல்லலாம். எளிதில் தீப்பிடிக்காதது. நீர்புகாத் தன்மையும் கொண்டது.

"வட இந்தியாவின் கிராமப்புற பகுதிகளிலும் மின்சார இரு சக்கர வாகனங்கள் வாங்குவதற்கு ஆர்வம் காட்டுகிறார்கள். பெட்ரோலுக்கு அதிக பணம் செலவழிக்க வேண்டியதில்லை. மேலும் பெண்கள் மற்றும் குழந்தைகள் இந்த வாகனத்தை எளிதாக ஓட்டலாம். இந்திய மக்கள் தொகையில் சுமார் 58 சதவீதம் பேர் சைக்கிள் மற்றும் சைக்கிள் ரிக்ஷாக்களில் பயணிக்கின்றனர். மின்சார வாக



னங்கள் பணக்காரர்களுக்கானது என்ற எண்ணத்தை மாற்றி, சாமானியர்களும் பயன்படுத்தக் கூடியதாக இருக்க வேண்டும் என்பது என் நோக்கம். இந்தக் கருவி மூலம் 8 கோடி இந்தியர்களின் முகத்தில் புன்னகையை ஏற்படுத்துவேன்" – என்று நம்பிக்கையோடு சொல்கிறார். சைக்கிளை மின்சார வாகனமாக மாற்றும் கிட் செயல்படும் விதம் குறித்து குர்சவுரப் விவரிக்கும் வீடியோ சமீபத்தில் வைரலானது. யூடியூப்பில் அவருடைய வீடியோவை இரண்டு லட்சத்துக்கும் அதிகமானோர் பார்வையிட்டுள்ளனர்.

எங்கள் வீடியோ வைரலாகும் என்று நான் நினைத்துக்கூட பார்க்கவில்லை. வாடிக்கையாளர்களுடன் பகிர்ந்து கொள்வதற்காக, அதை உருவாக்கினோம். அதற்கு நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது" – என்பவர் தனது 'கிட்'டை நாடு முழுவதும் பயன்பாட்டுக்கு கொண்டு வரும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்.

காலைக்கதிர்
Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 119

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## நிர்வாகப் பணிப்பும் இராணுவத்தின் மறுப்பும்

குமரப்பா, புலேந்திரன் போன்றோரை விடுவிக்க ஜே.ஆர். ஒத்துவராவிட்டால் தான் இந்தியப் படைகளின் யாழ் தளபதி ஹர்கிரட்சிங்கை விடுதலை புலிகளின் விடுதலையை உறுதிப்படுத்த ஒழுங்குகள் செய்யுமாறு கேட்பார் எனத் தூதுவர் டிக்ஸிற் பாலசிங்கத்திடம் தெரிவித்தார். கொழும்பில் நிலைமைகள் மேலும் இறுக டிக்ஸிற், ஹர்கிரட்சிங்கிடம் குமரப்பா, புலேந்திரன், மற்றோர் தடுத்து வைக்கப்பட்டிருந்த பலாலி முகாமை முற்று முழுதாக இந்திய படைகளின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருமாறு பணித்தாலும் துர்பாக்கியம் இங்குதான் நிகழ்ந்தது.



மாத்தையா, குமரப்பா, ஹர்கிரட் சிங்

டிக்ஸிற்றுக்கும் ஹர்கிரட்சிங்குக்கும் உறவுகள் சீரானவையாக இருக்கவில்லை. ஹர்கிரட்சிங் தான இராணுவத் தளபதியாகையால் தனக்கு மேலதிகாரிகளாக இருக்கும் தனது தளபதியின் (அதாவது தென்பகுதி கட்டமைப்பின்) உத்தரவில்தான் தான் அப்படியான இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ள முடியும் என்றார். ஓர் அரசியல்வாதியினதோ அல்லது நிர்வாக அதிகாரியினதோ பணிபுக்கு ஏற்ப அப்படியான முற்றுகையை மேற்கொள்வது முடியாது, ஏனெனில் அவர்களைப் பிடித்துத் தடுப்பு காவலில் வைத்திருப்பவர்கள் ஸ்ரீலங்கா இராணுவத்தினர், தாக்குதல்களில் இரு பகுதியினருக்கும் இழப்புகள் நேரும், அப்படியான இழப்புக்களுக்கு இது நிர்வாக அதிகாரியின் பணிப்பில் செய்யப்பட்டது எனக் காரணம் கூற முடியாது எனவும், அவர்கள் தடுப்பு காவலில் வைக்கப்பட்டமை ஒட்டித் தான் கரிசனையும், மன வருத்தமும் அடைந்திருந்தாலும், இராணுவ கட்டுப்பாடுகளை மீறுவதற்கு இல்லை என்பதை ஹர்கிரட்சிங், பாலசிங்கத்திடம் தெரிவித்தார்.

அதிகார திமிர்களும், அரசியல் ஆதாயங்களும்தான் அந்தச் சந்தர்ப்பங்களில் மேலோங்கி நின்றன. லலித் அத்துலத் முதலி அவர்களைக் கொழும்புக்குக் கொண்டு வந்தே தீருவேன் எனறு ஒற்றைக் காலில் நின்றார்.



ஹர்கிரட் சிங், புலேந்திரன், பிரபாகரன்

பேச்சுவார்த்தைகளில் டிக்ஸிற், அவர்கள் விமானத்தில் கொண்டு செல்லப்பட்டாலும், பூர்வாங்க விசாரணைகளுக்குப் பின் அதே தினம் திரும்பி கொண்டு வந்து விடுவிக்கப்படுவார்கள் என ஜே.ஆரால் ஏற்றுக் கொள்ளப்பட்டதாக உறுதியளித்தார். ஆனால் விடுதலைப் புலிகள் அதனை நம்புவதற்குத் தயாராகவிருக்கவில்லை.

மாறாக, அவர்கள் தமது போராளிகள் துன்புறுத்தப்படுவார்கள், சித்திரவதைக்கு ஆளாக்கப்படுவார்கள், ஆகவே சிறிது நேரம் தன்னும் கொழும்புக்கு ஏற்றப்படக் கூடாது எனக். கண்டிப்பாக நின்றார்கள்.

இதன் பின்னரே மதியுரைஞர் பாலசிங்கம் தனது கழுத்தில் சயனைட் குப்பிகளை அணிந்து சென்று, அவர்களுக்குக் கையளித்து, அவர்கள் தங்களது உயிர்களை இனத்துக்காகத் தந்த நிகழ்வு இடம் பெற்றது. திலீபனினது இழப்பினால் ஏற்கனவே உணர்ச்சி கொதிப்பிலிருந்த மக்கள் இந்த மரணங்களினால் மேலும் கொந்தளித்து, பலாலி முகாமுக்கு உந்தப்பட்டு, இந்திய படைகளுடன் கைகலப்புகளில் ஈடுபட்டனர். இப்படியான தாக்கங்கள் தமிழ் பகுதிகளில் தொடர, இதனை விடுதலைப் புலிகளும் ஊக்குவித்தனர். அவர்களே பின்னணியில் நின்று தூண்டி நடத்துகிறார்கள் என இந்திய படையினர் கணித்தனர்.

கிழக்கு மாகாணத்தில் இன ரீதியான தாக்குதல்கள் நடந்தன. இந்த தாக்குதல்களை அடுத்து ஜே.ஆர். தான் விடுதலை புலிகளுக்கு அளித்திருந்த பொது மன்னிப்பை மீள் வாங்கி, விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் திருப்பப்பட வேண்டும் என்ற உறுதியில் நின்றார். இந்த அங்கலாய்ப்புகளாலும், நம்பிக்கையீனங்களாலும் இந்திய அரசியல் மட்டத்திலும், ராஜீவாலும் கூட, விடுதலைப் புலிகள் ஒப்பந்தத்தை ஏற்கப்போவதில்லை, ஆயுதங்களைக் கையளிக்கவோ, பாவிக்காமலோ விடப்போவதில்லை, பெரும்பான்மையான தமிழ் மக்கள் ஒப்பந்தத்தை அமல்படுத்தி, இராணுவத் தாக்குதலை நிறுத்தி, ஒரு சகஜ நிலைக்கு வர விரும்பினாலும், விடுதலைப் புலிகள் அதற்கு விடப்போவதில்லை, ஆகவே அவர்கள் கட்டுப்படுத்தப்பட்டு, ஆயுதங்கள் களையப்பட வேண்டும் என்ற தீர்மானத்திற்கு வரப்பட்டது. அதையடுத்து இராணுவத் தாக்குதல்கள் தொடங்கின, இந்திய படையினரோடு முரண்பாடுகளும் தாக்குதல்களும் இங்கிருந்து தொடங்கின.



லலித் அத்துலத் முதலியும் ராஜிவும்

டிக்ஸிற் ஜே.ஆருடன் வாதிட்டு பெற்ற உறுதிமொழிகளில், சட்ட ரீதியாக ஸ்ரீலங்காவால் விசாரணைக்கு உட்படுத்தப்படக் கூடிய தளபதிகள் குமாரப்பாவும் புலேந்திரன் மற்றவர்களுடன் கொழும்பு சென்று திரும்பி இருக்கலாம். அவை இந்தியாவினுடைய பாதைகளில் பலத்த தாக்கங்களை தந்து இருக்காது. நாணல் பூக்கள் போல சாய்ந்து நிமிர விடுதலைப் புலிகள் தயாராகவிருக்கவில்லை. அவர்கள் நம்பிக்கைகளில் பொறுமை காக்கவும் தயாராக இருக்கவில்லை.

தங்களது ஏகோபித்த தலைமைக்கு ஆப்புகள் வருகின்றன, ஆதலால் அதற்கான அரண்களைக் கட்ட இந்தியா ஒதுங்கி நிற்க வேண்டும், அன்றில் ஒதுக்கப்பட வேண்டும் என்ற சிந்தனையே மேலோங்கி நின்றது.

மக்களை மையப்படுத்தி, அவர்களின் பாதுகாப்புக்களை உறுதிப்படுத்த எடுக்கப்பட்ட சாதுரிய திட்டங்களாக தமிழ் மக்களோடு ஆதரவாக இயங்கக்கூடிய பகுதிகளை தங்களுக்காக மேலும் அனுசரணையாக்க கூடிய உத்திகளாகவும் சர்வதேசத்தாலோ அதன் புத்திஜீவிகளாலோ அவை பார்க்கப்படவில்லை.

ஆயுதங்களைக் கட்டுப்படுத்தி, சமாதானத்தை நோக்கி நகரும் சர்வதேச உத்திகளில், அதன் தொடக்கத்தில் ஏற்படக்கூடிய ஏற்றத் தாழ்வுகளைச் சமாளித்து, பொறுமை காத்து, முன்னேற வேண்டுமென்ற மனோபாவத்தைக் கைக்கொள்ளவில்லை.

இந்தியப் படைகளின் வரவால் தமிழ் பகுதிகளில் இருந்த கள நிலையை அது பாதிக்கும் என்று கருதி, குட்டையைக் குழப்பி, அதன் விளைவாக மக்கள் பாதைப் படைந்தால், அதனால் பொறுப்புக்கள் வளரும், இந்தியா தனி நாடு என்று இலட்சியத்தை அமைத்துத் தராமல் அதற்கு பாடுபடுபவர்களையும் முன்னேற விடாது தடுக்கிறது என்ற அனுதாபங்களும் விடுதலை புலிகளை ஒட்டி வளரும் என்ற 'கொரில்லா' தத்துவங்களை ஏகோபித்த தலைமையை நிறுவுவதற்காக அனுசரிக்கப்பட்டது.

(வளரும்...)



லலித் அத்துலத் முதலியும் ஜே.ஆரும்

காலைக்கதிர் Kalaikkathir

## ஈஸ்டர் தாக்குதல் நாட்டின் உளவுத்துறையினரின் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

பயங்கரவாதத்தடுப்புச் சட்டத்தை இரத்து செய்யக் கோரி நாடளாவிய ரீதியில் ஊர்திவழிப் போராட்டமாகச் சென்று கையெழுத்து திரட்டும் நடவடிக்கை யாழ்ப்பாணம் மாவிட்டபுரத்தில் நேற்று ஆரம்பிக்கப்பட்ட போதே ரவூப் ஹக்கீம் இதனைத் தெரிவித்தார்.

## திருத்தங்கள் வேண்டாம் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அந்தச் சட்டமே முழுமையாக நீக்கப்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை இரத்து செய்யக் கோரி நாடளாவிய ரீதியில் ஊர்திவழிப் போராட்டமாக சென்று கையெழுத்து திரட்டும் நடவடிக்கை யாழ்ப்பாணம் மாவிட்டபுரத்தில் ஆரம்பிக்கப்பட்ட போதே தர்மலிங்கம் சித்தார்த்தன் இதனை தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் -

தமிழ் அரசியல் கைதிகள் எவ்வித காரணங்களுமின்றி நீண்ட காலமாக சிறைகளில் வாடிக் கொண்டிருக்கின்றார்கள். பயங்கரவாத தடை சட்டத்தில் திருத்தங்கள் செய்வதை ஏற்றுக் கொள்ள முடியாது. அந்தச் சட்டமே முழுமையாக நீக்கப்பட வேண்டும்.

நாடு முழுவதும் உள்ள மக்களின் ஆதரவுடன் செல்லும்போது இந்தச் சட்டத்தை நீக்குவதற்கு வலு காணப்படும். கையெழுத்துத் திரட்டும் இந்த நடவடிக்கையில் இன, மத பேதமின்றி அரசியல் கட்சிப் பிரதிநிதிகள், தொழிற்சங்க தலைவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டுள்ளோம். இந்த பயங்கரவாத தடை சட்டத்தை நீக்க வேண்டும் இல்லாவிடில் அது நீக்கப்படும் வரை நாம் தொடர்ந்து போராட வேண்டும். - என்றார்.

## பெயரளவுப் பதவிகளால் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பொதுஜன பெரமுன நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது என்று அறியமுடிகின்றது.

நேற்றுமுன்தினம் பதவியேற்ற 37 இராஜாங்க அமைச்சர்களில் அதிகளவானோர் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவைச் சேர்ந்தவர்களே. இவர்களை விடவும் பெரமுனவைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் இராஜாங்க அமைச்சுப் பதவிகளை எதிர்பார்த்துள்ளனர்.

இந்தநிலையில் நாட்டின் பொருளாதார நெருக்கடி காரணமாக இராஜாங்க அமைச்சர்களுக்குரிய வரப்பிரசாதங்கள் பல நிறுத்தப்படுகின்றன என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளார். அது பெரமுன நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது என்று அறிய முடிகின்றது.

நேற்றுமுன்தினம் இராஜாங்க அமைச்சர்களாகப் பொறுப்பேற்றவர்கள், தமது இராஜாங்க அமைச்சுக்கு வழங்கப்பட வேண்டிய மேலதிக கொடுப்பனவு தேவையில்லை என்று தெரிவித்திருந்தபோதும், ஏனைய வரப்பிரசாதங்கள் தொடர்பில் எதுவும் தெரிவிக்கவில்லை.

இந்தநிலையில், அவர்கள் பலர் ஏற்கனவே அந்தந்த அமைச்சுக்களிடம் வாகனங்களைக் கோரியிருந்ததுடன், இதுவரை வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகளை காண்பித்து தமது வாகன உரிமைகள் மற்றும் அவற்றின் தேவைகள் தொடர்பாக அதிகாரிகளிடம் வலியுறுத்தியுள்ளனர் என்றும் தெரியவருகின்றது.

அவர்களின் கோரிக்கைக்கு அமைய புதிதாக பதவியேற்றுள்ள 37 இராஜாங்க அமைச்சர்களுக்கு 296 அரசாங்க வாகனங்கள், அதற்கான எரிபொருள் மற்றும் சாரதிகளை ஒதுக்க வேண்டிய நிலைமை காணப்படுகின்றது.

இந்தநிலையில், ஜனாதிபதியின் செயலாளர் வெளியிட்டுள்ள சுற்றறிக்கை பெரமுன இராஜாங்க அமைச்சர்களை அதிருப்தியடைய வைத்துள்ளது.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

நாற்பது வருடங்களுக்கு மேலாக நீதி நியாயத்தை எதிர்பார்த்து போராடிய அனைத்து தரப்புகளுமே பயங்கரவாத தடைசட்டத்துக்கு எதிராக குரல் கொடுத்துள்ளனர்.

சர்வதேச நாடுகளும் மனித நேய அமைப்புகளும் சட்டத்தை நீக்குவதற்கு அழுத்தங்களை கொடுத்த போதும் அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் எதையும் செய்ததாக இல்லை. ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவது தொடர்பாக அழுத்தங்கள் உருவாகியுள்ள நிலையில் உள்நாட்டில் கடந்த இரண்டு மாதங்களாக ஏற்பட்ட போராட்டங்களுக்கு பின்னர் ஒரு சூழல் உருவாகியுள்ளது.

தற்போதுள்ள அரசாங்கம் போராட்டத்தில் ஈடுபட்டவர்களையும் போராட்டத்திற்கு தலைமை தாங்கியவர்களையும் அடக்கு வதற்காக பயங்கரவாத தடைச் சட்டத்தை பாவிக்கின்ற நிலைமை உருவாகிஉள்ளது. இது அவசரமாக தடுக்கப்பட வேண்டிய விடயமாகும். ஒவ்வொரு கட்டத்திலும் பயங்கரவாத தடைச் சட்டம் இல்லாமல் நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியாது என்கிற போலியான கருத்து உருவாக்கப்பட்டு வருகிறது.

அண்மையில் நடந்த ஈஸ்டர் குண்டு தாக்குதலை நியாயப்படுத்துவதற்கும் பயங்கரவாத தடைச் சட்டத்தை பயன்படுத்துகின்றனர். இஸ்லாமிய தீவிரவாதம் நாட்டுக்குள் ஊடுருவி விட்டதான மாயையை காட்டுவதற்காக கூலிக்கு அமர்த்தப்பட்ட படையினரை இந்தநாட்டின் உளவுத்துறையையே பயன்படுத்தியதா என்கிற பாரிய சந்தேகம் தற்போது எழுந்துள்ளது.

இவ்வாறான சந்தேகங்களுக்கு தீர்வு கிடைக்காத நிலையில் இதற்காக அப்பாவி இளைஞர்கள் தண்டிக்கப்படுவதும் நிரபராதிகள் கொல்லப்படுவதற்கும் இந்த சட்டம் இந்த சட்டம் வழிகோலுகிறது.

திடீர் மரண விசாரணை இல்லாமல் சடலங்களை கொண்டு சென்று புதைக்கலாம் என்கிற விடயத்தை கூட அவசர காலச் சட்டத்தில் அதற்குரிய ஏற்பாடுகளை புகுத்தி கடந்த காலங்களில் செய்தனர்.

தற்போது எழுந்துள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் மக்கள் எழுச்சியை அடக்குவதற்காக பயங்கரவாத தடைச் சட்டத்தை பாவிக்கின்ற நிலைமை காணப்படுகிறது. அனைத்து ஜனநாயக சக்திகளும் ஒன்றிணைந்து செயல்படும்போது மிக விரைவில் இந்த கொடிய சட்டத்தை நாட்டின் சட்ட புத்தகத்திலிருந்து அகற்றுவதற்கு வாய்ப்பு கிட்டும் - என்றார்.

## ராஜபக்ஷ கும்பலுக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அபேரத்ன கலைஞர்கள் போன்று இளைஞர், யுவதிகளைக் கைது செய்வதன் மூலம் அரச மிலேச்சத்தனத்தைக் காட்டுவதையே அரசு செய்வது வருகின்றது எனவும் அவர் குற்றம் சாட்டினார்.

இதுபோன்ற வன்முறைகளை ஒரு போதும் அனுமதிக்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பிரபல நடிகை தமிதா அபேரத்னவின் நலன் விசாரி ப தற்காக நேற்று சென்ற எதிர்க்கட்சித் தலைவர், பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒவ்வொருவரும் தாங்கள் நம்பும் ஜனநாயக அபிப்பிராயத்துக்காக முன் நிற்கும் உரிமையை எந்த அரசாலும் அல்லது எந்தத் தரப்பாலும் மீற முடியாது.

இந்த நாட்டில் மக்களின் அடிப்படை உரிமைகளை மீற ஒருபோதும் இடமளிக்க முடியாது - என்றார்.

## தமிழ் அரசியல் கைதி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இருந்து கொழும்பு மகசின் சிறைச்சாலைக்கு நேற்றைய தினம் சர்வதேச கவனமொன்றை ஈர்த்துக் கொள்ளும் வகையில் பயணத்தை மேற்கொண்டனர்.

'குரலற்றவர்களின் குரல்' அமைப்பு யாழ் ஊடக அமையத்தில் நேற்று மதியம் 2மணியளவில் நடாத்திய ஊடக சந்திப்புக்கு பின்னர் இந்த பயணத்தை ஒழுங்குபடுத்தப்பட்ட பஸ்ஸில் மேற்கொண்டனர்.

தேசிய சிறைக்கைதிகள் தினம் நாளை செப்டம்பர் 12ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுகின்ற நிலையில் இந்த பயணம் ஆரம்பிக்கப்பட்டதாக குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் முருகையா கோமகன் தெரிவித்தார்.

கொழும்பு மகசின் சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதிகள் சிலர் உண்ணா விரதத்தில் ஈடுபட்டுள்ள நிலையில் அரசியல் கைதிகளின் விடுதலைக்கு வலுச் சேர்க்கும் வகையில் அரசியல் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் க.வி.விக்னேஸ்வரன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், யாழ் மறை மாவட்ட குருமுதல்வர் ஜெபரட்ணம் அடிகளார், பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான பேரெழுச்சி இயக்க ஒருங்கிணைப்பாளர் வேலன் சுவாமிகள், யாழ் மாநகர பிரதி முதல்வர் து.ஈசன், யாழ் மாநகர சபை உறுப்பினர் வ.பார்த்தீபன், யாழ் மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகள் சங்க பிரதிநிதிகள் எனப் பலரும் யாழ் ஊடக அமையத்திற்கு வருகைதந்து பயணத்திற்கு ஆதரவு தெரிவித்தனர்.

அரசியல் கைதிகளை பார்வையிடுவதற்கு, உறவினர்கள் சென்று வருவதற்கான போக்குவரத்து ஒழுங்குகளை கனேடிய தமிழர் பேரவை, யாழ் மாநகர முதல்வர் வி.மணிவண்ணன், மாநகர உறுப்பினர் பார்த்தீபன் ஊடாக ஒழுங்கு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.








## சர்வதேசத்துக்கு வழங்கிய .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்துச் செய்யக் கோரி நாடளாவிய ரீதியில் ஊர்தி வழிப் போராட்டமாகச் சென்று கையெழுத்துத் திரட்டும் நடவடிக்கை யாழ்ப்பாணத்தில் நேற்று ஆரம்பிக்கப்பட்டது. இதில் சர்வஜன நீதி அமைப்பின் சார்பில் கலந்துகொண்டு சுமந்திரன் எம்.பி. உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்து உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவோம் என்று சர்வதேசத்துக்கு இலங்கை அரசு வாக்குறுதி அளித்திருக்கின்றது. ஆனால், இன்று வரை அது நீக்கப்படவில்லை.

இந்த வருட ஆரம்பத்திலே இந்தச் சட்டம் நீக்கப்படுகின்ற வரை இதனை உபயோகிக்க மாட்டோம் என்ற வாக்குறுதி ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கும், பல்வேறு சர்வதேச அமைப்புக்களுக்கும் இலங்கை நாடாளுமன்றத்திலேயும் ஒரு உறுதிமொழி கூறப்பட்டிருக்கின்றது. ஆனால், பயங்கரவாதத் தடைச் சட்டம் தற்போதும் உபயோகிக்கப்படுகின்றது.

கடந்த காலங்களில் மூன்று மாதங்களாகக் காலிமுகத்திடலில் போராட்டத்தை முன்னெடுத்திருந்தவர்களுக்கு எதிராக இந்தச் சட்டம் பிரயோகிக்கப்பட்டியிருந்தது. இந்தச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டவர்கள் 90 நாட்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்கள்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மீளவும் உபயோகிப்பதற்கு இந்த அரசு ஆரம்பித்திருக்கின்ற இந்த வேளையில் நாங்கள் இந்தப் போராட்டத்தைத் திரும்பவும் புத்துணர்ச்சி கொடுத்து ஆரம்பித்திருக்கின்றோம். அதாவது இந்த வருடம் பெப்ரவரி மாதம் ஆரம்பித்திருந்த இந்தக் கையெழுத்துப் போராட்டத்தை மீளவும் ஆரம்பித்திருக்கின்றோம்.

தற்போது இந்தப் போராட்டத்தில் அனைத்து தொழிற்சங்கங்களுடைய ஒன்றியங்களும், பொதுஜன அமைப்புக்களும் இணைந்துள்ளன.

இந்தப் போராட்ட ஊர்தியை 25 மாவட்டங்களுக்கும் கொண்டு செல்லப் போகின்றோம். வடக்கு, கிழக்குக்கு அப்பால் நாம் செல்கின்றபோது விசேடமாக மாணவர் ஒன்றியத்தினரும், தொழிற்சங்கங்களுடைய பிரதிநிதிகளும் அந்தந்த மாவட்டங்களிலேஙங்களுக்கு உறுதுணையாக இருப்பார்கள்.

யாழ்ப்பாணத்திலே இந்த ஊர்தியானது 3 நாட்கள் பயணிக்கும். இங்கே கூடுதல் அளவிலான கையெழுத்துக்கள் திரட்டப்பட வேண்டும். அதற்குப் பின்னர் ஒவ்வொரு மாவட்டங்களாகச் செல்வோம்.

இறுதியில் அம்பாந்தோட்டையில் இந்தப் போராட்டம் நிறைவு பெறும். இதற்கு அனைவரும் முழு ஆதரவு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம் - என்றார்.

# இராஜாங்க அமைச்சர்களுக்கு பொறுப்புகளை வழங்குவதால் நாட்டைக் கட்டியெழுப்புகின்ற பணிகள் துரிதப்படுத்தப்படும்!

## என்கிறார் மஹிந்த அமரவீர



புதிய இராஜாங்க அமைச்சர்களுக்கு பொறுப்புகளை வழங்குவதன் மூலம் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான துரித பணிகளுக்கு பாரிய பங்களிப்பு வழங்கப்படும்.

விசேடமாக இராஜாங்க அமைச்சர்களாக அரசாங்கத்தின் பொறுப்புக்களை நிர்வகித்து, குறித்த இராஜாங்க அமைச்சுடன் நேரடியாகத் தொடர்புபடுகின்ற அமைச்சுக்கு முழுமையான பங்களிப்பை வழங்குவதே இராஜாங்க அமைச்சர்களின் பிரதான பணியாகும் என வனசீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

புதிய இராஜாங்க அமைச்சர்கள் நியமனம் தொடர்பில் கமத்தொழில் அமைச்சர் வனசீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சர் மஹிந்த அமரவீர கருத்து தெரிவிக்கையில் மேலும் தெரிவித்தவை வருமாறு –

தற்போது 20 அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களே இதுவரை நியமிக்கப்பட்டுள்ள பின்னணியில், அமைச்சர்களின் பொறுப்பில் உள்ளடக்காத ஏனைய அனைத்து அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பொறுப்பிலேயே இருக்கின்றன.

அமைச்சரவை அமைச்சர்களுக்குப் பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ள போதிலும், அந்த எல்லைக்குள் வராத அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்கள் ஜனாதிபதியின் கீழ் உள்ளன. உதாரணமாக, ஜனாதிபதியின் பொறுப்புக்கு மேலதிகமாக பாதுகாப்பு, நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள், சமுர்த்தி அபிவிருத்தி, தொழில்நுட்பம் மற்றும் மகளீர் மற்றும் சிறுவர் விவகாரம், முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் பொறுப்புக்களும் ஜனாதிபதியிடமே உள்ளன.

இதன் காரணமாக ஜனாதிபதிக்கு அதிகளவான பொறுப்புக்கள் அமைச்சின் கீழ் வழங்கப்பட்டுள்ளமையின் ஊடாக, பொதுமக்களுக்கு வழங்கப்படுகின்ற சேவைகளில் குறைவைக் காணக்கூடியதாக உள்ளது.

ஆனால் இராஜாங்க அமைச்சர்கள் நியமனம் தொடர்பில் தற்போது பல்வேறு தரப்பினரும் பல்வேறு கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். நாடு நெருக்கடிகளை எதிர்நோக்கும் போது அரசாங்கம் இராஜாங்க அமைச்சர்களை நியமித்திருப்பது பொருத்தமான விடயமல்ல என சிலர் கூறுகின்றனர்.

எனினும், இம்முறை இராஜாங்க அமைச்சர்களை நியமிக்கும் போது ஜனாதிபதி, இராஜாங்க அமைச்சர்களை நியமித்தாலும் வழமை போன்று சகல வசதிகளும் அவர்களுக்கு வழங்கப்பட மாட்டாது எனத் தெளிவாக குறிப்பிட்டார்.

தற்போதைய அரசாங்கத்தின் கீழ் உள்ள அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சம்பளத்துக்கு மட்டுமே உரித்துடையவர்களாவர். மேலும், இராஜாங்க அமைச்சர்களுக்கு ஒரு வாகனம் மட்டுமே கிடைக்கும்.

எனவே, நாட்டின் வளங்களைத் தேவையில்லாமல் அனுபவிக்கும் வாய்ப்பு அவர்களுக்குக் கிடைப்பதில்லை. அரசாங்கத்தின் ஸ்திரத்தன்மை சர்வதேச ஆதரவைப் பெற்றுக் கொள்வதற்கு இன்றியமையாததாகும். எனவே, நிலையான அரசாங்கத்தை நடத்துவதற்கு, வலுவான அமைச்சரவை அவசியமாகும்.

ஒவ்வொரு அமைச்சிலும் திட்டமிடப்பட்டுள்ள வேலைத்திட்டம் மிகவும் விசாலமானதாகும். எனவே, அந்தப் பணிகளை ஓர் அமைச்சரால் மாத்திரம் தனியாக நிறைவேற்ற முடியாது.

எனவே, இராஜாங்க அமைச்சர்களை நியமிப்பதில் தவறு இருப்பதாக நான் நினைக்கவில்லை. எனினும், கொவிட் தொற்று ஆரம்பித்த நாள்முதல், நான் தனிப்பட்ட முறையில் அமைச்சர் சம்பளத்தைப் பெறவில்லை. அந்தப் பணத்தை நான் கொவிட் நிதியத்துக்கே வழங்கினேன். இன்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குக் கிடைக்கின்ற சம்பளம் மாத்திரமே எனக்குக் கிடைக்கின்றது.

நாட்டை தற்போதுள்ள நிலையிலிருந்து மீட்டெடுப்பதற்கு அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும். புதிதாகப் பதவியேற்றுள்ள இராஜாங்க அமைச்சர்களும் அர்ப்பணிப்புடன் பணியாற்ற வேண்டும். எனவே, இந்த நியமனத்தில் சிறப்பு சலுகைகள் அல்லது பொதுநிதியை தவறாகப் பயன்படுத்த இடம்கிடைக்காமையால் இந்த நியமனங்களில் தவறு இருப்பதாக நான் நினைக்கவில்லை. – என்றார்.




## புத்தூக்கம் தரும்மருந்தாய் புவியதனில் திகழ்கின்றாய்!

**முண்டாசுக் கவிஞனேநீ மூச்சுவிட்டால் கவிதைவரும்
பண்டார மாயிருந்து பலகவிதை தந்தாயே
தமிழ்வண்டாக நீயிருந்து தாகமெலாம் தீர்த்தாயே
உண்டாலே அமுதமென உன்கவிதை இருந்ததுவே**

**வறுமைத் தடாகத்தில் மலர்ந்திட்ட மாமலரே
தறிகெட்ட மனிதரை குறிபார்த்த மாகவியே
விடுதலைச் சிறகுகளை விரித்திட்ட பெருங்கவியே
வீழ்வேனா எனவுரைத்து வித்தானாய் புரட்சிக்கு**

**மடமைத் தனத்துக்கு மாலையிட்டார் மண்டியிட
அடிமைத் தளையிருந்தார் அலறியே ஓடிவிட
பொடிவைத்து பாட்டிசைத்து போக்கியே நின்றாயே
பொல்லாதார் வசையெல்லாம் பொசுங்கிவிடச் செய்தனையே**

**பாப்பாக்கு பாட்டுரைத்து பலகாரம் கொடுத்தாயே
பாஞ்சாலி கதையெடுத்து பகர்ந்தாயே சுயவுணர்வை
வருமென்னும் நம்பிக்கை மனமுழுக்க கொண்டதனால்
வருமுன்னே விடுதலைக்கு பாடிவிட்டாய் பள்ளுதனை**

**வேதத்தில் திளைத்தாலும் வில்லங்கம் வெறுத்தாயே
பாதகத்தை மிதித்துவிட கோபத்தை விரித்தாயே
சோதனைகள் அத்தனையும் சாதனையாய் கொண்டாயே
சுறுசுறுப்பின் உருவாக சுடராக எழுந்தாயே**

**மூடத் தனத்தை முற்றாக வெறுத்திட்டாய்
முத்திக்கு வித்தான பக்குவத்தை விதைத்திட்டாய்
வேண்டாத குப்பைகளை வீசியே எறிந்திட்டாய்
வீண்வாதம் செய்வோரை வெந்தணலில் வீசிட்டாய்**

**அச்சமதை மடமையென்று அனைவருக்கும் சொன்னாயே
உச்சிமீது வான்விழினும் அச்சம்தவிர் என்றாயே
மெச்சும்படி வாழுஎன்று மெய்சிலிர்க்கச் சொன்னாயே
இச்சைகொண்டு தமிழதனை இணைத்தபடி இருந்தாயே**

**பசியுந்தன் கூடவரும் பாட்டதற்கு விருந்தாகும்
பசிகண்டு வெகுண்டதால் பாரழிப்பேன் என்றாயே
பசிபற்றி நீயறிவாய் பசியழிக்க நீபுகன்றாய்
பாரதத்தின் விடிவுக்காய் பட்டினியை யேற்றாயே**

**அன்னைத் தமிழின் அக்கினிக் குஞ்சானாய்
அமிழ்த மெனத்தமிழை அரியாசனம் வைத்தாய்
அஞ்சாமைக் குணத்தை ஆளுமை ஆக்கினாய்
அடிமை இருளகற்ற ஆகிநின்றாய் ஆதவனாய்**

**முத்தமிழைப் பாரதியுன் சொத்தாக ஆக்கினாய்
முத்திரையாய் கவியுலகில் முன்வந்து நின்றாய்
எத்திக்கும் உனைநினைக்க இவ்வுலகில் வாழ்ந்தாய்
புத்தூக்கம் தரும்மருந்தாய் புவியதனில் திகழ்கின்றாய்**

**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா**

# கருத்துச் சுதந்திரத்தின் மீதான அரசாங்கத்தின் மட்டுப்பாடுகள் அதிகார இருப்பை தக்கவைக்க முட்படுவதை காண்பிக்கின்றன!

## கரு ஜெயசூரிய குற்றச்சாட்டு

சுதந்திர, ஜனநாயக நாடொன்றில் கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கும் அமைதியான முறையில் போராட்டங்களில் ஈடுபடுவதற்குமான உரிமை என்பது இன்றியமையாததாகும்.

அவ்வாறிருக்கையில் அரசாங்கமொன்று அந்த உரிமையை மட்டுப்படுத்துமேயானால், அதன்மூலம் மக்களின் அபிலாகைளை விடுத்து வெறுமனே அதிகாரத்தைத் தக்கவைத்துக்கொள்வதை மாத்திரம் இலக்காகக்கொண்டு செயற்படுகின்ற ஆட்சியாளர்களின் தன்மையே வெளிப்படுகின்றது என்று சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவரும் முன்னாள் சபாநாயகருமான கரு ஜயசூரிய சுட்டிக்காட்டியுள்ளார்.

அதுமாத்திரமன்றி இந்நாட்டு மக்கள் அனைவரினதும் ஒட்டுமொத்த அபிலாஷைகளைப் பிரதிபலிக்கும் வகையில் அமைதியான முறையில் செயற்பட்ட இளம் போராட்டக்காரர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுவரும் அடக்குமுறைகளை உடனடியாக முடிவிற்குக்கொண்டுவருமாறும் அவர் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளார்.

மக்கள் போராட்டத்தில் முன்னணி செயற்பாட்டாளராகத் திகழ்ந்த பிரபல நடிகை தமிதா அபேரத்ன கடந்த புதன்கிழமை கைதுசெய்யப்பட்ட நிலையில், அவரை எதிர்வரும் 14 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கோட்டை நீதிவான் திலின கமகே உத்தரவிட்டுள்ளார்.

இந்நிலையில் நடிகை தமிதா அபேரத்னவின் கைது தொடர்பாக சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் சார்பில் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே கரு ஜயசூரிய மேற்கண்டவாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பவை வருமாறு –

பிரபல நடிகையும் நாட்டில் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதை முன்னிறுத்தி செயற்பட்ட இளம் செயற்பாட்டாளருமான தமிதா அபேரத்ன பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டமை அரசாங்கத்தின் ஜனநாயக விரோத அபிலாஷைகளை வெளிப்படையாகக் காண்பித்திருக்கும் மற்றொரு சந்தர்ப்பமாக அமைந்திருக்கின்றது.

இலங்கைக்குள் அமைதியான முறையில் எதிர்ப்பை வெளிப்படுத்துவதென்பது அரச அடக்குமுறைக்கு உள்ளாவதற்கான ஒரு காரணமாக அமைந்திருப்பதாக ஒட்டுமொத்த சர்வதேச சமூகமும் சுட்டிக்காட்டிவருகின்றது.

அண்மையில் தனியொரு குடும்பத்தின் ஆட்சிக்கு எதிராக நாட்டுமக்கள் முன்னெப்போதுமில்லாத வகையில் வீதிக்கு இறங்கி வெளிப்படுத்திய எதிர்ப்பின் மூலம் இவ்வாறான மக்கள்விரோத ஆட்சியை இனியொருபோதும் சகித்துக்கொள்ளமுடியாது என்ற செய்தியே தெளிவாகக் கூறப்பட்டது.

மக்களின் அந்த எதிர்ப்புத் தொடர்பாக நடிகை தமிதா அபேரத்ன கடந்த காலங்களில் எடுத்துரைத்து வந்தார். எனவே அரசாங்கம் இவ்வாறான தன்னிச்சையான தீர்மானங்களை மேற்கொள்வதற்கு முன்னர் அது தொடர்பில் ஓரிரு முறை சிந்தித்துப்பார்க்க வேண்டியது அவசியமாகும்.

அதேவேளை, இந்நாட்டு மக்கள் அனைவரினதும் ஒட்டுமொத்த அபிலாகைளைப் பிரதிபலிக்கும் வகையில் அமைதியான முறையில் செயற்பட்ட இளம் போராட்டக்காரர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுவரும் அடக்குமுறைகளை உடனடியாக முடிவிற்குக் கொண்டுவருமாறு அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம். அவர்களின் பின்னால் பாரியதொரு சக்தியாகத் திகழ்கின்ற பொதுமக்களின் குரலுக்கு உரியவாறு செவிசாய்க்குமாறும் கோருகின்றோம் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.09.2022இல் வெளியிடப்பெற்றது.